Registered a as News Paper

பக்கங்கள் 06

விலை: ரூபா 5-00

நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | பங்குனி 08 | [21-03-1993] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 31

## இளவயதில் எடை அதிகமானால் மாரடைப்பு நோய் அபாயம்

இருபது வயதுக்குக் கீழுள்ள ஆண்கள் அளவுக்கதிகமாக எடையுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் முதியோர்களாக ஆனபிறகு அவர்களுடைய எடை அதிகம் இருந்தாலோ இல்லாவிட்டாலோ மாரடைப்பு நோய் உருவாகும் சாத்தியம் உடையவர்களாக இருக்கிறார்கள் என அண்மையில் அமெரிக்காவில் வொஸ்டன் நகரில் டஃப்ஸ் பல்கலைக்கழகத்தின் வயதானோர்க்கான சத்துணவு ஆய்வு மையம் மேற்கொண்ட ஓர் ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. இவர்களது ஆய்விலிருந்து சிறுவயதில் அதிகம் எடையுடன் இருக்கும் ஆண்கள் வயதான பருவத்தையடையும் போது பெரும்பாலும் பெருங்குடல் (6ஆம் பக்கம் பார்க்க)

# கற்பூரப் பொதிக்குள் சக்திவாய்ந்த குண்டு

# யாழ்ப்பாணத்தில் தாக்குதலுக்குத் திட்டம்

## நாசகாரரின் சதி அம்பலம்

## புலனாய்வுத் துறையினர் சாதனை

(யாழ்ப்பாணம்)

கற்பூரத் துண்டுகளால் மிகவும் நுட்பமாகப் பொதிசெய்யப்பட்ட அதிசக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்றை வட்டக்கச்சியில் விடுதலைப்புலிகளின் புலனாய்வுத்துறையினர் கண்டு பிடித்துள்ளனர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொதுமக்களுக்கு பெரும் உயிர்ச்சேதத்தை விளைவிக்கும் நோக்குடன் இவ்வெடிகுண்டு நாசகாரர்களால் கொண்டுவரப்பட்டது. இவ்வெடிகுண்டைக் கொண்டுவந்த சூத்திரதாரியர் இருவர் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பூரத்துண்டுகளுடன் சி-4 ரக வெடிமருந்துகள் சேர்ந்ததாக மிகவும் சாதுரியமான முறையில்பொதிசெய்யப்பட்ட அதி உயர் சக்திவாய்ந்த வெடிகுண்டு ஒன்றை விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையினர் வட்டக்கச்சியில் கண்டு பிடித்தனர். துவிச்சக்கரவண்டிகள் வாடகைக்குவழங்கப்படும் வீடொன்றில் வைத்தே புலனாய்வுத் துறையினர் இக்குண்டைக் கண்டுபிடித்தனர்.

இந்த வெடிகுண்டு பொது மக்களுக்குப் பெரும் உயிர்ச் சேதத்தை விளைவிக்கக் கூடியது என்றும் குடாநாட்டில் பொது இடங்களில் வைத்துப் பெரும் உயிர்நாசத்தை ஏற்படுத்தும் நோக்கில் நாசகார சக்திகளால் இங்கு கொண்டு வரப்பட்டதென்றும் புலனாய்வுத்துறையினர் கூறினர். வவுனியா மூலம் இந்த வெடிகுண்டைக் கொண்டுவந்த இருவர் புலனாய்வுத் துறையினரால் கைதுசெய்யப்பட்டுவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்

இதேவேளைகடந்த வருடத்திலும் நாசகார சக்திகள் அப்பாவிப்பொதுமக்கள்மீது வெடிகுண்டுத்தாக்குதலை நடத்தியமையும், வேறு சில தாக்குதல்களை நடத்த முற்பட்டமையும் தெரிந்ததே.

கடந்தவருடம் ஏப்ரல்மாதம் 23 ஆம் திகதி கொம்படியில் நாசகாரச் சக்திகள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் பத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதும், பதினைந்துபேர் வரையில் காயமடைந்ததும் தெரிந்ததே.

மேலும் கடந்தவருடம் அக்டோபர் மாதத்தில் சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்ட நாசகார நடவடிக்கை ஒன்று தேசப்பற்றுமிக்க வியாபாரிகள் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்கியமையால் அம்பலமானதும் வாசகர்கள் அறிந்ததே.

## கைதாகிய சூத்திரதாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டினுள் தாக்குதல் நடத்தவென கற்பூரத்துண்டுடன் வெடிகுண்...

செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

...தன்) வயது 42, பென்டிக் கோஸ் வீதி, சூசைப்பிள்ளையார் குளம், 2ஆம் குறுக்குத்...

போரூட் - றெட்பானா

## நிறுவன பிரதிநிதிகள் புலிகள் சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர். போரூட், றெட்பானா ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளே புலிகளுடன் பேச்சு நடாத்தியுள்ளனர்.

இச்சந்திப்பின்போது இங்கு நிலவும் அரசியல் நிலை பற்றியும், அகதிகள் நிலை பற்றியும் ஆராயப்பட்டது.

போரூட் நிறுவனத்தின் சார்பில் ஹென்றி கிலாண்ட் என்பவரும், றெட்பானா நிறுவனத்தின் சார்பில் காசூக் என்பவரும் விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன்பாலசிங்கம், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## யூக்கோ. நெருக்கடி உதவிகளை பாதிக்கிறது

### போரூட் பிரதிநிதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பிய நாடுகளில் அண்மைக் காலத்தில் பணத்தின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி உங்களுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவியைப் பெரிதும் பாதித்துள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக யுகோஸ்சுலவாக்கியாவில் தோன்றியுள்ள நெருக்கடிகளும் சோமாலியாப் பட்டினிச் சாவும் எங்களது உதவித் திட்டத்தில் சேர்த்துக் (6 ஆம் பக்கம் பார்க்க)

# கைதாகிய சூத்திரதாரிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ். குடாநாட்டினுள் தாக்குதல் நடத்தவென கற்பூரத்துண்டுடன் வெடிகுண்டைக் கடத்திய இரு நாசகாரர்களும் தற்பொழுது விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட நாசகார சக்திகள் இருவரினதும் விபரங்கள் வருமாறு:

ஃ மாரிமுத்து கந்தசாமி (கந்தன்) வயது 42, பென்டிக் கோஸ் வீதி, சூசைப்பிள்ளையார் குளம், 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா.

ஃ கந்தையா கோபாலகிருஷ்ணன் (கோபால்) வயது 42, தொல்புரம், சுழிபுரம், யாழ்.

டிக்கை ஒன்று தேசப்பற்று மிக்க வியாபாரிகள் விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையினருக்கு ஒத்துழைப்பு வழங்கியமையால் அம்பலமானதும் வாசகர்கள் அறிந்ததே.

(யாழ்ப்பாணம்)
ஐரோப்பிய நாடுகளில் அண்மைக் காலத்தில் பணத்தின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி உங்களுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு உதவியைப் பெரிதும் பாதித்துள்ளது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக யுகோஸ்சுலவாக்கியாவில் தோன்றியுள்ள நெருக்கடிகளும் சோமாலியாப் பட்டினிச் சாவும் எங்களது உதவித் திட்டத்தில் சேர்த்துக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போரூட் பிரதிநிதி தெரிவிப்பு

# ராணுவ தாக்குதலுக்கு அஞ்சி மக்கள் இடம்பெயர்வு

(தொல்புரம்)
மாதகல் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தமது கரையோரக் காவல் நிலைகளிலிருந்து நேற்று அதிகாலை 3.30 மணியளவில் மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி அகோர எறிகணை வீச்சினையும், துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தவண்ணம் இருந்தனர்.

அத்தோடு கவசவாகனங்கள், டாங்கிகள் சகிதம் இராணுவம் வெளியேறி வருவது போல் வாகனங்களின் பேரிரைச்சலும் கேட்டது.

இச் சம்பவத்தினால் அச்சமடைந்த சுழிபுரம், பறாளாய், கம்பனை, கல்லைவேம்படி, குடாக்கனை, தலையாட்டி, காட்டுப்புலம், இறாத்தலடி, பண்ணாகம், வடலியடைப்புப் பகுதிகளைச் சேர்ந்த குடிமக்கள் தமது வசிப்பிடங்களைவிட்டு, வேறு இடங்களைத் தேடி இரவிரவாகத் தொல்புரம் வழக்கம்பரை அம்மன் கோவிலடி, மூட்டுச்சந்தையடி, மத்திய சனசமூக நிலையக் கட்டடம், பத்தானைக் கேணியடி, வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, சங்கானை ஆகிய பகுதிகளை நாடி சந்திகளிலும், தெருக்களிலும், கோவில்களிலும் வேறு பல இடங்களிலும் கூடிநின்றனர்.

இதேவேளை எறிகணை, துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்களால் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரியவருகிறது. (41)

# காங்கேசன் பாதையூடாக குடாநாட்டுக்கு உணவு

## அடுத்த வாரம் ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை - சேந்தாங்குளம் வீதியூடாக குடாநாட்டுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்து வரும் செயற்பாடு மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என தெரியவருகிறது.

காங்கேசன் துறை துறைமுகத்திற்கூடாக உணவுப் பொருள்களை எடுத்துவருவதற்கான சம்மதத்தை விடுதலைப் புலிகள் ஏற்கனவே தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

தற்பொழுது இம்முயற்சிக்குத் தேவையான சகலமுன்னேற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளதாக கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. குடாநாட்டுக்குள் எடுத்துச் செல்வதற்கென காங்கேசன்துறை துறைமுகத்தில் உள்ள உணவுக்களஞ்சியத்தில் சுமார் 2000 மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

உணவுப்பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதுகுறித்து அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கொழும்பில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்க தலைமை அலுவலகத்துக்கு அறிவித்துள்ளார்.

மேற்படி துறைமுக களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருக்கும் உணவுப்பொருள்கள் மிகவிரைவில் காங்கேசன்துறை - சேந்தாங்குளம் வீதியூடாக வாகன அணிமூலமாக குடாநாட்டுக்குள் எடுத்துவரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை மேற்படி வீதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலி கடலில் பெரும் மோதல் கடற்படையினர் விரட்டியடிப்பு

நேற்று மாலை 6.30 மணியளவில் கிளாலி கடற்பரப்பில் சென்றுகொண்டிருந்த விடுதலைப்புலிகளின் படகை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்

நான்கு நீருந்து விசைப்படகில் வந்த கடற்படையினரே இவ்வாறு தாக்குதலை நடாத்தினர். இவர்கள் மீது விடுதலைப்புலிகள் கடும் துப்பாக்கி தாக்குதலை மேற்கொண்டனர்.

இக் கடும் மோதல் சுமார் இரண்டு மணிநேரம் நீடித்தது. புலிகளின் துப்பாக்கிப் பிரயோகத்தை தொடர்ந்து பின் வாங்கிச் சென்ற கடற்படையினர் கரையிலிருந்து சிறிது நேரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின்னர் முகாம் திரும்பிவிட்டனர்.

படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

## பாவற்குளத்தில் எறிகணை வீச்சு

(வவுனியா)
வவுனியா பாவற்குளம்பகுதி மீது சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று எறிகணைத் தாக்குதலை மேற்கொண்டனர். காலை 7-00 மணியளவில்இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது.சேதவிபரம்தெரியவில்லை

# நவாலிப் பகுதியில் நேற்று விமான குண்டு வீச்சு

[யாழ்ப்பாணம்]
நவாலிப் பகுதியில் நேற்றுக் காலை 8.05 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை நடாத்தின. இவ் விமானங்களுக்கு உதவியாக உலங்கு வானூர்தியொன்று அப்பகுதிகளை வட்டமிட்டு நோட்டமிட்டவண்ணம் இருந்தது. குடியிருப்புப் பகுதிகளை மையமாகவைத்து இத் தாக்குதல் நடாத்தப்பட்டபோதும் சேதம் எதுவும்ஏற்படவில்லை. குண்டு வீச்சு நடாத்திக் கொண்டிருந்த இவ் இரு விமா

(6ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புகள் மீது அவ்ரோ தாக்குதல்

மன்னார் பெரியமடு பகுதியில் நேற்று சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான அவ்ரோ விமானமொன்று குண்டு வீச்சு தாக்குதலை நாடத்தியுள்ளது. காலை 8.30 மணியளவில் மக்கள் குடியிருப்புக்களை வட்டமிட்ட இவ் விமானம் குடியிருப்பு பகுதிகளை நோக்கி தாக்குதலை நடாத்தியது.

இத்தாக்குதலின் போது சேதம் எதுவும் ஏற்படவில்லை என தெரியவருகிறது.

## மாணவருக்கு கொப்பிகள்

[கொழும்பு]
பாடசாலைப் பிள்ளைகளுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்க போரூட்டும், றெட்பானாவும் முன்வந்துள்ளன. இந்த அப்பியாசக் கொப்பிகள் கொழும்பு விலைக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எதற்கும் மற்றவர்களின் கையை எதிர்பாராமல் இருப்பதைத் தவிர்ப்பதற்காகவே இவை நியாய விலையில் வழங்கப்படவுள்ளதாகவும் முகாம்களில் உள்ள சிறுவர்களுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அன்னைபூபதி நினைவாக

# மருத்துவப் பிரிவினரின் போசாக்குத் திட்டம்

அன்னை பூபதியின் நினைவு நாள் நிகழ்ச்சியில் 19-03-93 தொடக்கம் 19-04-93 வரையும் உள்ள மாதகாலப் பகுதியில் மருத்துவப் பிரிவினர் ஒரு போசாக்கு உணவுத் திட்டத்தை மக்கள் மத்தியில் மேற்கொள்ளவுள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இத்திட்டத்தில் முதலாவது கிழமை போசாக்கு உணவுத் திட்டத்தினை உள்ளடக்கிய பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பிரசார நடவடிக்கைகள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

ஸ்ரீலங்கா அச்சகம்
(புத்தகசாலையல்ல)

ஸ்ரீகாந்தா அச்சகம் லேன்-ராஜா தியேட்டர் அருகாமை தனது சொந்த இடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக்கொள்கின்றோம். 234A, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
(4457)

விற்பனைக்கு

இரண்டு பேடும், ஒரு சேவல், மூன்று வான் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. செல்வக்குமார், சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, நல்லூர் வடக்கு.
(சி 6225)

அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று (3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை)யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள்).
(சி-6126)

தேவை

திருச்சி யமால் முகமது, சீத்தாலெட்சுமி நாசனல் கோலி கொறஸ், பிசப்கீபர் கல்லூரிகள் மலர்கள் தேவை. தொடர்பு: இராமர் சிவன் மாளிகை, 166 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
(4514)

'சாளரம்' வாசகர் வட்டம் அமைப்பு

(நெல்லியடி)

பாடசாலை மட்டத்தில், 'சாளரம்' வாசகர்வட்டம், கடந்த 8-ம் திகதி கரணவாய பொன்னம்பல வித்தியாலய மாணவர் மன்றத்தினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

தளபதி கிட்டு உருவப்படம் திறப்பு

[வடமராட்சி]

மூத்த தளபதி கேணல்கிட்டுவின் 61 ஆவதுநாள் நினைவையொட்டி தொண்டமனாறு கலைவாணி சனசமூக நிலை

# வெளிவாரி பட்டப்படிப்பு; விண்ணப்பம் ஏற்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்படிப்புகள் பிரிவின் 92/93 ஆம் கல்வி ஆண்டிற்குரிய கலை முதற் கற்கைநெறி மற்றும் வர்த்தக முதற் கற்கைநெறி ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அத்துடன் பொதுக் கலைமாணிபகுதி- I, சிறப்புக் கலைமாணி பகுதி- I, வர்த்தகமாணி பகுதி- I ஆகிய கற்கைநெறித் தேர்வுகளுக்கான விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களும், உரிய விபரங்களும் யாழ். பல்கலைக்கழக வெளிநிலைப் பட்டப்படிப்புகள் பிரிவு அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படிகற்கைநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் நெகிழ்ச்சித் தன்மை கொண்டவையாகும். எனவே தேவையான தகைமைகள் குறித்த விபரங்களையும், பாடத்திட்டத்தையும் மேற்படி அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

### மணிக்கூட்டு கோபுர சட்டங்கள் நீக்கம்

யாழ் மத்தியில்உள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தின் தென்புறத்திலும், கிழக்குப்புறத்திலும் இருந்த இரண்டு பிறேம்கள்யாழ்மாநகரசபைவேலைப் பகுதியினரால் நேற்றைய தினம் கழற்றப்பட்டன.

கடந்த சில நாட்களாகஇவ்விரு பிறேம்களையும் தாங்கியிருந்த மரங்கள் உருக்குலைந்து சிதைந்து விழும் நிலையில் இருந்ததைக் கண்டுவந்த யாழ் மாநகரசபை வேலைப்பகுதியினர் மக்களின் உயிராபத்தை தவிர்க்கும் நோக்குடன் இதனை கடந்த வெள்ளி கழற்றி தமது பாதுகாப்பில் வைத்துள்ளார்கள். இவைகள் கழற்றி எடுக்கப்பட்டமையினால் இவ்விருபக்கங்களும் துவாரங்களாகக்காட்சியளித்தவண்ணம் உள்ளதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

அத்துடன் வடபுறத்திலும் மேற்குப் புறத்திலும் உள்ள இரு பிரேம்களும் கழற்றப்படாமல் அவ்விடத்திலேயே உள்ளன.

### மண்ணெண்ணெய் விநியோகம்

புனர்வாழ்வுப்பகுதியால் வழங்கப்பட்ட மண்ணெண்ணெயை இன்றுவரை பெற்றுக் கொள்ளாத வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க உலர் உணவு அட்டை வைத்திருப்பவர்கள் 'இ', 'உ' அட்டைகளை சமர்ப்பித்து உங்களுக்குரிய மண்ணெண்ணெயை 25-03-93 ஆம் திகதிக்கு முன் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையத்தில் பெற்றுக் கொள்ளும்படி பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார்.
(88)

### பாலபண்டித வகுப்புகள்

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நாளை திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு, தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம் நடத்தும் பாலபண்டித, பிரவேச பண்டித வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. யாழ் பிரதேசக் கல்விப்பணிப்பாளர், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், குறித்த கல்விக் கோட்டங்களின் பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள், சங்கச் செயற்குழுவினர், ஆசிரியர்கள் ஆகியோர் இத் தொடக்க வைபவத்திலே கலந்து கொள்வர்.

வகுப்புக்களுக்கு ஏற்கெனவே பதிவு செய்துகொண்டவர்களும், புதிதாக சேரவுள்ளவர்களும் வருகைதருமாறு வேண்டப்படுகின்றனர்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு

28-6-1924

# பொற்கணக்கு சீட்டிழுப்பில் நெல்லியடிக்கு முதற் பரிசு

[பருத்தித்துறை]

அகில இலங்கை ரீதியில் இலங்கை வங்கி தலைமையகத்தால் நடாத்தப்பட்ட மகளிர் பொற்கணக்கிற்கானஅதிர்ஷ்ட சீட்டிழுப்பின் முதலாவது பரிசை நெல்லியடி இலங்கை வங்கிக்கிளை வாடிக்கையாளரொருவர் தட்டிக்கொண்டார்.

இப்பரிசைத்தட்டிக்கொண்ட சி. இராஜேஸ்வரி என்ற பெண்மணி, வெளிநாட்டுக்கு உல்லாசமாகச் செல்லக் கூடிய பயணச்சீட்டைப் பெற்றுக் கொள்கிறார்.

சர்வதேச மகளிர் ஆண்டையொட்டி கடந்தவருடம் இலங்கை வங்கி மகளிர் பொற்கணக்கு அதிர்ஷ்டத் திட்டத்தினை ஆரம்பித்திருந்தது. இம்மகளிர் பொற்கணக்கு அதிர்ஷ்ட,சீட்டிழுப்பு இலங்கை வங்கித் தலைமையகத்தில் இடம்பெற்றது.
[25]

### அகால மரணம்

நயினாதீவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கனடாவில் அகால மரணம் அடைந்துள்ளதாக தெரிய வருகின்றது. நயினாதீவைச் சேர்ந்தவரான யோகேஸ்வரன் என்ற இளைஞரே இவ்வாறு அகால மரணமடைந்துள்ளார்.

### நிர்வாகிகள் தெரிவு

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவு கடந்த ஞாயிறன்று பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் இடம்பெற்றது. இதில் தலைவராக என். கே. குலசிங்கமும், உப தலைவராக காசி விஸ்வநாதனும், செயலாளராக சு. தனபாலசிங்கமும், உப செயலாளராக பொ. தியாகராசாவும், பொருளாளராக க. தியாகராசாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

❋

வலி கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் பொதுக்கூட்டம் அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது நடப்பு ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதில் தலைவராக வி. வி இராஜரட்ணமும் செயலாளராக த. ஜெயசீலனும், பொருளாளராக ச. ஏகாம்பரநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

❋

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஆரம்ப வைபவமும் நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் தலைவராக சோ. பத்மநாதனும், செயலாளராக வே. சிவகுமாரனும், பொருளாளராக செ. துரைராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

### மண்ணெய் இல்லை

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு, மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து சக்கோட்டையில் அகதிகளாக வசிக்கும் குடும்பங்களுக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் மூலம் பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லையெனத் தெரிய வருகின்றது.

நாளாந்தம் கூலி வேலை செய்து வாழ்க்கையைநடாத்தி வரும் இவ் அகதிகள் கூடுதலான பணம் கொடுத்து மண்ணெண்ணையை வாங்க முடியாத நிலையில்கஷ்டமடைந்து வருகின்றனர்.
(30)

### ஓய்வூதியர் கூட்டம்

ஓய்வூதியர்களுக்கு பொதுவாகவும், இடம்பெயர்ந்த ஓய்வூதியர்களுக்கு குறிப்பாகவும் நிவாரணம் பெறுவது தொடர்பாக அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று காலை பத்து மணியளவில் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு யாழ் குடாநாட்டில் இயங்கும் சகல ஓய்வூதியர் சங்கங்களின் பிரதிநிதிகளையும் சமுகமளிக்குமாறு வடமாநில ஓய்வூதியர் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### பாராட்டுபசாரம்

1991ஆம் ஆண்டிற்கான 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மட்டுவில் தெற்கு அ.மி. தமிழ்க் கலவன் பாடசாலையிலிருந்து தோற்றி 154 புள்ளிகள் பெற்று சித்தியெய்திய ஒரேயொரு மாணவியான யசோதரன் ஷர்மிளாவுக்கு மேற்படி பாடசாலையில் பாராட்டுபசாரம் நடத்தப்பட்டது.

இவ்வைபவத்தில் அதிபர் ரி. துரைரத்தினம் மற்றும் ஆசிரியைகள் திருமதி சண்முகநாதன், செல்வி பாலநந்தினி ஆகியோருடன் பெற்றோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ஔவையார் விழா நடைபெற சிறப்புற வாழ்த்துகிறோம்

... சிவன்சக்தி தெய்வீக

## நினைவு கூருகின்றோம்...

**1993-03-21**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை - ஈச்சிலம்பத்தைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

ஜெகன் [இராசையா துரைசிங்கம் - கோவிலடி, தம்பலகமம் - திருமலை]

யாழ் - கைதடியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

நடா [குழந்தையன் நடராசா - கைதடி வடக்கு - யாழ்.]

1987 ஆம் ஆண்டு வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

பெரியராஜன் (ராஜன் - ஓமந்தை - வவுனியா)

கிளிநொச்சியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

★ சின்னப்பரா (பரராசசிங்கம் - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

★ சாந்தன் (இ. சாந்தகுமார் - அல்வாய் - பருத்தித்துறை)

1988 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட இரு ஆறுமாதக் குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு ஏழாலையில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

(மல்லாகம் பிரதேசப் பொறுப்பாளர்)

லெப். சிறைவாசன் [தவமணிநாயகம் முரளி கிருஷ்ணா - 'உதயதாரகை' மல்லாகம் - யாழ்.]

நாயுடு [மல்லாகம் - யாழ்.]

1991 ஆம் ஆண்டு மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்காப் படைமுகாம் தகர்ப்பின் மூன்றாம்நாள் நடைபெற்ற சமரில் வீரச்சாவெய்திய -

சத்தியமலர் [தேவமலர் டேவிட் - தளவாய், செங்கலடி - மட்டு.]

பாணன் [பாலசிங்கம் குணபாலன் - திருக்கேதீஸ்வரம், மாந்தை - மன்னார்]

2-ம் லெப். சுமன் [முத்துராஜா கேதீஸ்வரன் - நல்லூர் - பூநகரி]

2-ம் லெப். நாதன் [ப. சுந்தரராஜ் - ஜெயபுரம், பல்லவராயன்கட்டு - கிளிநொச்சி]

மேஜர் சதா (நடராஜப்பெருமாள் திலிப்குமார் - வரணி வடக்கு - கொடிகாமம்)

கப்டன் அப்பன் (சண்முகம் சிறீதரன் - தச்சன் தோப்பு, நாவற்குழி, கைதடி- யாழ்.)

லெப். நேதாஜி (இரட்ணலிங்கம் மங்களேஸ்வரன் - எம். 53-ம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர் - யாழ்.)

லெப். கஸ்ரோ (நடேசபிள்ளை செந்தூரன் - 18, பெருமாள்கோயில் தெற்குஒழுங்கை- யாழ்.)

லெப். சைமன் [நாகராசா மோகனரூபன் - சைமன் வீதி, கொக்குவில் மேற்கு - வைரவர்கோயிலடி]

சயந்தன் (செல்வராசா லோகேஸ்வரன் - நவாலி - யாழ்.)

தாந்தன் [செல்லையா செல்வகுமார் - சந்தைமேற்கு

யத்தில் கடந்த புதனன்று உருவப்படத் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

ஈகைச்சுடரை வடமராட்சி வடக்கு கடற்புலிகள் அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் திரு. வரதன் ஏற்றிவைக்க, கிட்டுவின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்துவைத்த தமிழீழ கடற்புலிகள் சிறப்புத் தளபதி திரு. சூசை தமிழீழ தேசியக் கொடியையும் ஏற்றி வைத்தார்.

---

31-ம் நாள்
நினைவஞ்சலி



செல்வி
சுப்பிரமணியம்
கமலேஸ்வரி

(மருத்துவதாதி பயிற்சிக்கலாசாலை யாழ். போதனா வைத்திய சாலை)

மலர்வு: 21-02-1955
உதிர்வு: 19-02-199[illegible]

அன்னாரின் இறுதிக்கிரியைகளுக்கு சமுகம்அளித்த அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றி.

- தாய்:
சு. இலட்சுமிப்பிள்ளை
அண்ணன், மைத்துனி,
மருமக்கள்.

மீசாலை வடக்கு,
மீசாலை. (4534)

---



இறப்பு
18-2-1993

# அமரர் இராமையா நாகறட்ணம்

(முன்னாள் களஞ்சியப்பொறுப்பாளர் - கொழும்பு)

மாதத் திதி -21-3-1993

மாதம் ஒன்று போனாலும் எம் கண்ணீரும்
ஓயவில்லை
எங்கள் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்
அந்த நினைவிலேயே உங்கள் முகம் நிறைந்திருக்கும்
சிரித்து சிரித்து எம்மை சிறையிட்ட செல்வமே
நீர் மறைந்து மாதம் ஒன்று போனதையா
புன்னகையை பெருநகையாய் புனைந்து நின்ற புனிதனே
பாசத்தின் உணர்வோடு பல கதைகள் சொல்வாய்
கலங்காத நெஞ்சமுடன் கடமையில் கண்ணானாய்
கவர்ந்தாய் மக்கள் அனைவரையும் கலங்கவிட்டு
எங்கு சென்றாய்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உற்றார், உறவினர்கள்.

"சரஸ்வதி பவனம்"
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (4532)

---

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
# வீரவேங்கை சாந்தன்

[இராசநாயகம் சாந்தகுமார்]
[கிளிநொச்சி நிதிப்பொறுப்பாளர்]

திதி - 12-04-1993

வீரப்பிறப்பு
10-12 1963

வீரச்சாவு
21-03-1987

நிழல் தருவாய் என இருந்தோம் - ஆனால்
அறவிட்டுச் சென்றாயே அருமைச் சாந்தா
மூந்துவர மாட்டாயா — எம்
வழி நீரைத் துடைப்பதற்கு
நீ தான் இன்றில்லை — உன்
நினைவுகளாவது எம்முடன் மிஞ்சட்டுமே.
உமது ஆத்மா சாந்தியடைய அம்பாளை
பிரார்த்திக்கும்,

யோகு மாமா, மாமி,
மருமக்கள்.

கதிரவேற்பிள்ளை வீதி,
புலோலி மத்தி. (4536)

---

பத்திரகாளி - சிவன்சக்தி தெய்வீக
வைத்திய அருள்வாக்கு ஆலயத்தினர்
அகில இலங்கை ரீதியாக முதல் தடவையாக நடாத்தி வருகின்ற யாழ். / கந்தர்மடம் ஆத்திசூடி வீதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய

# இரண்டாவது ஆண்டு ஔவையார் விழா

21. 03. 93 இன்று பிற்பகல் 4 மணிக்கு
நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

| | |
|---|---|
| நாதஸ்வரக்கச்சேரி - | காரைநகர் கணேசன் குழுவினர் |
| மங்களவிளக்கேற்றுதல்- | திரு. வே. பொ பாலசிங்கம் யாழ் மாநகர ஆணையாளர் |
| ஆசியுரை - | நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதபரமாசாரியசுவாமிகள் |
| தலைவர் உரை - | பண்டிதர் பொன்னம்பலவாணர் |
| பேச்சு - | சிவதர்மவள்ளல் திரு கனகராஜா ஜே. பி |
| சிறப்புரை - | சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி |
| சிறப்புச் சொற்பொழிவு - | ஆ. மகாலிங்கம் நல்லூர் உ.அ.அ |
| ஔவையார்விழா | பேச்சு ஃ பரிசில்கள் வழங்கல் |
| சிறுவர் நிகழ்ச்சி - | நாடகம் ஔவையாரும் முருகனும் |
| 8.30 மணிக்கு | |
| பட்டிமன்றம் - | கம்பன் கழகம் |

பொருள்: ஔவையாரின் தனித்துவமான புகழுக்கு பெரிதும் காரணமாவது-
தனிப்பாடல்களா? நீதிநூல்களா?

| | |
|---|---|
| நடுவர் - | கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் கம்பன் கழகம் |
| 10 மணிக்கு | |
| வயலின் சோலோ - | யாழ் நாச்சிமார் கோவிலடி வயலின்வித்துவான் திரு.அ.ஜெயராமன் |
| இறுதி நிகழ்வாக - | எஸ்.ஜி. சாந்தன் குழுவினரின் இன்னிசை கானங்கள் |

இவ்வண்ணம்
ஆத்திசூடி வீதி ஸ்ரீசித்தி விநாயகர்
ஆலய ஔவையார் விழாக்குழுவினர்.

பகல் விசேட பூசைகள் அன்னதானம் நடைபெறும்.

விளம்பர அன்பளிப்பு
அருள் சொரியும் பத்திரகாளி சிவன் சக்தி
தெய்வீக வைத்திய அருள்வாக்கு ஆலயம்
35 / 3 இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம்

செவ்வாய் - வெள்ளி காலை- மாலை நேரம் இடம் பெறும் விசேட பூசையின் பின்னர் அருள்மிகு பத்திரகாளி அம்பாள் வாக்கிட்டுவருவதுடன் என்றுமேதீராத நோய்களுக்கு அம்பாளின் கடாட்சத்தினால் தெய்வீக வைத்தியமும் செய்து வருகின்றாள்.

(சி-6240)

---

**காந்தன்** [செல்லையா செல்வகுமார் - சந்தைமேற்கு ஒழுங்கை - பருத்தித்துறை]

**பீற்றர்** [சத்தியநாதன் சிறீஸ்கந்தராசா வேம்படி வீதி, மானிப்பாய் - யாழ்.]

**கோணேஸ்** [சின்னத்தம்பி அன்னலிங்கம் - வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர் - யாழ்.]

முல்லைத்தீவில் பாம்பு கடித்ததில் எமைப்பிரிந்த -

**றியாஸ்** (இராமலிங்கம் கணேஸ் - தர்மபுரம் - கிளிநொச்சி)

1992 ஆம் ஆண்டு பொலநறுவை - பாலத்துப் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**மேஜர் ஈஸ்வரன்** [கந்தசாமி லிங்கேஸ்வரன் - சந்திவெளி - மட்டு.]

**அலன்** [கணபதிப்பிள்ளை இராமச்சந்திரன் - மொறக் கொட்டாஞ்சேனை - மட்டு.]

மட்டு - ஆண்டாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ராமமூர்த்தி-மேகன்** [செல்லத்தம்பி பரமேஸ்வரன் காயங்கேணி, மாங்கேணி, வாழைச்சேனை - மட்டு.]

மட்டு - கள்ளியந்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**குகதாஸ்** [பொன்னுத்துரை சந்திரகுமார் - துறை நீலாவணை - மட்டு.]

வவுனியா - பேயாடிகூழாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**லெப். சுதாகர்** [தில்லையம்பலம் திருப்பரம்- கல்மடு, ஓமந்தை - வவுனியா]

வவுனியா பேயாடி கூழாங்குளம் வீதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் - மல்லாகத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம் .

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6234)

யாழ்ப்பாணம்

# அகதிமுகாம்களில் காணப்படுகின்ற போசாக்கின்மை பற்றிய ஒரு கண்ணோட்டம்

இன்று அபிவிருத்தியடைந்த நாடுகள் பலவற்றில் கூட போசாக்கின்மை காரணமாக அநேகமான சிறுவர்கள் தமது 5-வது வயதை அடைய முதல் மரணத்தைத்தழுவுகின்றார்கள். இந்நிலையில் எம்மிடையே காணப்படுகின்ற போர்ச்சூழ்நிலை, இடம்பெயர்வு, இடநெருக்கடி, உணவுப் பற்றாக்குறை போன்றவற்றிற்கு மத்தியில் வாழும் எம் மக்களுக்கு போசாக்கின்மையால் பாதிப்பு ஏற்படுவது எதிர்பார்க்க வேண்டிய தொன்றுதான். ஆனாலும் இப்போசாக்கின்மையின் தாக்கத்தை நாம் சுலபமாக தகர்த்தெறிய வேண்டும். இதற்கு சகல பிரிவினரும் ஒன்றிணைந்து திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

ஏனெனில் எமது சுபீட்சமான வருங்காலத்தை கட்டியெழுப்பப் போகின்றவர்கள் இச்சிறுவர்கள்தான். இவர்களின் உடல், உளவளர்ச்சியை சரியான முறையில் கவனிக்காமல் விட்டால் எதிர்காலத்தில் தேவையற்ற, அநாவசிய மரணங்களுக்கு மத்தியில் வாழும் ஓர் ஆரோக்கியமற்ற, சமுதாயத்தைத்தான் எதிர்பார்க்க முடியும்.

இப்படியான பாதிப்புகளில் இருந்து எம் சிறுவர்களைக் காப்பாற்றி ஆரோக்கியமான உடல், உளவளர்ச்சி நிரம்பியவர்களாக ஆக்குவதற்கு நாம் போசாக்கின்மையை ஏற்படுத்தும் காரணிகளை முதலில் ஆராய வேண்டும்.

கடந்த மாவீரர் வாரத்தில் விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவினர் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 22 அகதிமுகாம்களில் ஓர் இலவச மருத்துவ சேவையை நடாத்தினர். இச்சேவையின் போது 2398 நோயாளர்கள் பார்வையிடப்பட்டனர். இவர்களில் அதிகமானோர் கர்ப்பிணித் தாய்மார்களும் 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களும்

வெனில் போசாக்கின்மையின் தாக்கத்தில் வாழும் சிறுவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவதேயாகும். ஆகவே மொத்தத்தில் போசாக்கின்மையால் தொற்றுநோய்களும் தொற்றுநோய்களால் போசாக்கின்மையும் மாறி மாறி தொடர்ந்து ஒரு சக்கரம் போல் வருவதினால் சிறுவர்களின் உடல், உளவளர்ச்சி மேலும் பாதிக்கப்படுவதுடன் அவர்கள் நிரந்தர நோயாளர்களாகவும் மாறுகின்றனர்.

இவற்றைவிட இன்னும்நாம் கடைப்பிடிக்கும்சிலமூடபழக்க வழக்கங்களினாலும் எமது சிறுவர்களுக்கு சரியான முறையில் உரிய நேரத்தில் நிறையுணவு கொடுக்கப்படுவதில்லை. உதாரணமாக 7-வது அல்லது 9-வது மாதத்தில் கோயிலில் வைத்து சோறு தீத்தும் வரையும் பிள்ளைகளுக்கு பாலைத்தவிர எந்த வித உபஉணவுகளும் கொடுக்கப்படுவதில்லை. இதனால் குழந்தைகளின் உடல், உளவளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

அடுத்ததாக ஒரு கர்ப்பதியாக இருக்கும் காலத்தில் இரத்தச் சோகையினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரியான முறையில் மருத்துவ கண்காணிப்புக்குள்ளாகாமல் இருந்தாலும் அத்தாய்க்குப் பிறக்கும் குழந்தை உடல், உள வளர்ச்சி குன்றியதாக காணப்படும். அத்துடன் ஆரோக்கியமான உடல், உள வளர்ச்சியுடன் பிறந்த குழந்தைக்குக் கூட சரியான விதத்தில் போதுமான அளவில் தாய்ப்பாலூட்ட தவறினா

**டாக்டர் சாந்தி**

லும் அக்குழந்தைக்கு போசாக்கின்மையின் பாதிப்புக்கள் ஏற்படும்.

டன் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும்.

மேலும் இச்சுகாதார தொண்டர்கள் கர்ப்பவதிகளின் வீடுகளுக்கு அடிக்கடி சென்று வயிற்றில் வளரும் குழந்தையின் வளர்ச்சிக்கு இரும்புச்சத்து, புரதச்சத்து, விற்றமின்கள் போன்றவை தேவைஎன்பதையும்அவற்றை சிகிச்சைநிலையத்தில் கொடுக்கப்படும் ஊட்டச்சத்துக் குளிசைகள் மூலமும், உணவுவகைகள் மூலமும் எப்படி பெறுவது என்பதை விளக்கமாகஎடுத்துரைக்க வேண்டும்.

03. தாய்ப்பாலூட்டலை ஊக்குவித்தல்.

இதற்கு தாய்ப்பாலின் முக்கியத்துவத்தையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துரைப்பதுடன் புட்டிப்பால் கொடுக்கப்படுவதினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும் ஆபத்துக்களையும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

04. உப உணவு கொடுப்பதை தீவிரப்படுத்தல்.

ஆரோக்கியமாக பிறக்கும் குழந்தைக்கு 4-6 மாதங்களின் பின்பு உப உணவுகளை கொடுக்கத் தவறினால் அக்குழந்தைக்கு போசாக்கின்மை ஏற்பட வாய்ப்புண்டு. ஆகவே தாய்ப்பால் ஊட்டலுடன் 3-ம் மாதத்தில் இருந்தே படிப்படியாக உபஉணவு கொடுத்தலை ஊக்குவிப்பதற்கு ஏதுவாக அவ்வுணவுகளை பற்றி, அவற்றின்முக்கியத்துவத்தைப்பற்றி விளக்கமாக அறிவுறுத்தவேண்டும்.

05. குழந்தைகளுக்கு போட வேண்டிய தடுப்பூசிகளின்முக்கியத்துவத்தை எடுத்துரைத்தல்.

இங்குதடுப்பூசிகளைபோடாமல் விடுவதினால் ஏற்படக்கூடிய நிரந்தர பாதிப்புகளையும் (உதாரணமாக போலியோ) அத்தடுப்பூசிகளைகுழந்தையின் எந்தெந்த மாதத்தில் போட வேண்டும் என்பது பற்றியும் தெளிவாக சொல்ல வேண்டும்.

விவசாயத் திணைக்களம், பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் போன்றவற்றின் ஒத்துழைப்பு, வழிகாட்டலில் செயல் படுத்த வேண்டும்.

08. வருங்கால சந்ததியினரை பாதுகாக்கும் சேவையில்ஈடுபட்டுள்ள அரச சார்பற்ற, அரச தொண்டர் நிறுவனங்களின் சேவைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து திட்டமிடல்.

இங்கு மேற் கொள்ளப்படும் சகல செயல்திட்டங்கள், நிவாரண உதவிகள், மருத்துவ உதவிகள் அனைத்தும் அம்முகாமில் உள்ள பிரச்சினைகள் முழுவதையும் நிவர்த்தி செய்யக் கூடிய விதத்தில் அமைய வேண்டும். அத்துடன் இச் செயல்பாடுகள் யாவும் பிரயோசனமான முறையில் பயன் படுத்துகின்றனவா அல்லது நடைமுறைப்படுத்த படுகின்றனவா என்று கண்காணிக்க வேண்டும்.

இச்செயல் திட்டங்களில்

01. சுகாதார சீர்கேடுகளினால் தொற்று நோய்கள் வராமல் தடுப்பதற்கு சுகாதார பழக்க வழக்கங்களை எடுத்துரைத்தல் வேண்டும்.

02. மருத்துவரீதியாக மிக மோசமான நிலையில் பாதிப்படைந்துள்ள முகாம்களை, இடங்களை தெரிவு செய்து அவற்றுக்கான மருத்துவ சேவையை விஸ்தரித்தல் வேண்டும்.

03. இடநெருக்கடியைகுறைப்பதற்கு இடைவெளி விட்டு சுகாதாரமுறைப்படி குடிசைகளை அமைத்துக்கொடுத்தல் வேண்டும்.

04. போதுமானளவு மலசல கூட வசதிகளை சுகாதார முறையில் அமைத்துக் கொடுத்தல்.

05. படிப்பறிவு குறைந்த பெற்றோர்களுக்கு கொடுக்கப்படும் சுகாதார அறிவித்தல்கள் அவர்களுக்கு விளங்கக் கூடிய விதத்தில் இருக்க வேண்டும்.

06. குடும்ப அங்கத்தவர்களுக்கு முக்கியமாகஆண்களுக்கு தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இடம் பெயர்ந்து வந்து முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஆண்களில்அநேகருக்கு தமது சொந்ததொழில்செய்ய வாய்ப்பற்றபடியால் வேறு தொழில் செய்ய முடியாது என்ற மன நிலையில் வாழ்கின்றனர். இம்மனப்போக்கை மாற்றியமைத்து வேறு ஏதாவது பிரயோசன

# விளையாட்டு

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் திரு க. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இவ் விளையாட்டுப் போட்டியிலே வடமராட்சிப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை பிரதம விருந்தினராகவும், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் கௌரவ விருந்தினராகவும், பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு டேவிற் அடிகளாரும், வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு. சி. பொன்னம்பலம் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். [25]

❋

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கான வருடாந்த தடகள விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலர் திரு.சி. முருகேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இப் போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் முதல் இடத்தையும் வல்வை விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது. [25]

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டிகள் கடந்த வியாழனன்று பாடசாலை அதிபர் திருமதி பி. எவ். சின்னத்துரை தலைமையில் நடைபெற்றது.

இப் போட்டியில் முதலாம் இடத்தை வீரமாமுனிவர் இல்லமும், இரண்டாம் இடத்தை ஞானப்பிரகாசர் இல்லமும், மூன்றாம்இடத்தை தனிநாயகம் இல்லமும் பெற்றுக் கொண்டன.

இந்த நிகழ்ச்சியில் தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன், உடற் கல்வித்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரிராஜா, உதவிக் கல்விப் பணிப்பாளர் அரவிந்தநாதன், பேராலய பங்குத்தந்தை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்குபற்றினர்.

❋

யா/மட்டுவில்வடக்கு சந்திரமௌலீச வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிறு மு. ப. 9 மணிக்கு நடைபெறும். முதன்மைவிருந்தினராக வடமாநில கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக்கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. வீரபத்திரன் அவர்களும் கலந்து சிறப்பிக்க இருக்கின்றனர்.

யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மெய்வல்லுநர் போட்டிகள் நேற்று முன் தினம் நடைபெற்றது. பிரதம விருந்தினர்களாக தமிழீழ கல்வி மேம்பாட்டு கழக பொறுப்பாளர் திரு. இளங்குமரன் அவர்களும், திருமதி வெற்றிச்செல்வி இளங்குமரன் அவர்களும், யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம்அவர்களும் கலந்து கொண்ட இந் நிகழ்ச்சியில். 3000 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்களை திருமதி வெற்றிச்செல்வி இளங்குமரன் அவர்கள் வழங்கி சான்றிதழ்கள் வழங்கும் வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

இங்கு நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் சிவப்பு இல்ல குழுவினரால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சி சகலரதும் பாராட்டைப்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. [90]

❋

யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல உடலாளர்கள் போட்டி செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

❋

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் ஒன்பது பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்தவியாழன்முதல் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.


## உத்தரவுபெற்ற நிலஅளவையாளர்சங்கம்

[வடபகுதி]

நில அளவைத் தொழிலில் நுட்பங்களையும், தரத்தையும் உயர்த்தி, அதன் மூலம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், பேணிப்பாதுகாத்தல், எமது உறுப்பினர்களின் நலன்களைப் பேணுதல் ஆகிய நோக்கங்களுடன் இச் சங்கம் 5.4.1989 இல் ஆரம்பிக்கப்பட்டு சீராகவும், உறுதியுடனும் இயங்குகிறது.

இதன் உறுப்பினர்கள் சங்கத்தால் வரையறுக்கப்பட்ட கோட்பாடுகள், தரம், ஒழுக்கம், கட்டணங்கள் ஆகியவற்றிற்கு இணங்கவே தொழிற்படவேண்டியவர்களாவர். ஆனால் உத்தரவு பெறாத போலியான சிலரும், நில் அளவைத் தொழிலில் ஈடுபட்டு சட்டத்திற்கும் உண்மைக்கும் புறம்பான வரைபடங்களைக் கூட வழங்கி எம்மக்களை ஏமாற்றுகிறார்கள் என அறிகிறோம்.

எனவே பொதுமக்களின் நலன் கருதி எமது உறுப்பினர்களின் பெயர் முகவரிப் பட்டியலைக் கீழே தருகின்றோம்.

| பெயர் | முகவரி |
|---|---|
| 1. வை. ஞானகுரு | ஊரிக்காடு, வல்வெட்டித்துறை |
| 2. ச. கிருஷ்ணசாமி | வேவில் வளவு, வல்வெட்டி, வல்வெட்டித்துறை |
| 3. வே. சிவபாதசுந்தரம் | சமரவாகு, உடுப்பிட்டி |
| 4. செ. தயானந்தன் | 15ஆம் கட்டை, உடுப்பிட்டி |
| 5. சி. அழகையா | தும்பளை வீதி, பருத்தித்துறை |
| 6. சி.வ.கோபாலகிருஷ்ணன் | மாதனை, பருத்தித்துறை |
| 7. [illegible] | [illegible] கிழக்கு, பருத்தித்துறை |

பார்வையிடப்பட்டனர். இவர்களில் அதிகமானோர் கர்ப்பிணித் தாய்மார்களும் 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களும் ஆவார்.

இங்கு சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட போது கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், 5 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் ஆகியோரில் 75 வீதமானோர் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் அநேகருக்கு இரத்தச் சோகை, விற்றமின்கள் குறைபாட்டினால் மாலைக்கண், வாய் அவியல், முரசு கரைதல், தலைச்சுற்று, உடல் சோர்வு, களைப்பு போன்ற நோய்களுடன் முக்கியமாக சிறுவர்களின் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டும் காணப்பட்டது.

இன்றுள்ள போர்ச்சூழ்நிலை இடம் பெயர்வு, இடநெருக்கடி, உணவுப் பற்றாக்குறை போன்றவை மட்டுமல்ல வேறும் பல காரணிகள் ஒன்று சேர்ந்து இப்போசாக்கின்மையின் தாக்கத்தை மேலும் தீவிரப்படுத்துகின்றன.

பெற்றோர்களின் கவனயீனம், அக்கறையின்மை, அறியாமை போன்றவற்றினால் வளரும் குழந்தைகளுக்கு தேவையான சத்துக்கள் அடங்கிய நிறை உணவு உரிய நேரத்தில், உரிய முறையில் கொடுக்கப்படுவதில்லை. சுகாதார பழக்க வழக்கங்களை சரியான முறையில் கடைப்பிக்க தவறுவதினால் அநேகமான முகாம்களில் சுகாதார சீர்கேடுகள் காணப்படுகின்றன. இதனால் அம்முகாம்களில் தொற்று நோய்களின் தாக்கம் கணிசமான அளவில் காணப்படுகின்றன. இவற்றுள் வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல், குடற்புழுக்களின் தொற்று ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இத்தொற்று நோய்களின் தாக்கத்தினாலும் போசாக்கின்மை ஏற்படுகின்றது. அத்துடன் போசாக்கின்மை உள்ள சிறுவர்களுக்கு தொற்றுநோய்கள் அடிக்கடி ஏற்படுகின்றது. இதற்குரிய காரணம் என்னலும் அக்குழந்தைக்கு போசாக்கின்மையின் பாதிப்புக்கள் ஏற்படும்.

ஒரு குழந்தை வளருவதற்கும், இரத்தத்தை விருத்தி செய்வதற்கும் உடல் எதிர்ப்புசத்தியை கட்டி எழுப்புவதற்கும் இரும்புச்சத்து, புரதச்சத்து, கனியுப்புக்கள், விற்றமின்கள் நிறைந்தநிறையுணவு கொடுக்கப்படல் வேண்டும். இதேபோல் கர்ப்பவதிகளும் தனக்கு மட்டுமல்ல தனது வயிற்றில் வளரும் குழந்தைக்கும் சேர்த்து சாதாரண ஒரு பெண் உண்ணும் உணவை விட இரண்டு மடங்கு கூடுதலான சத்துநிறைந்த உணவை உட்கொள்ளவேண்டும். பாலூட்டும் தாய்மார்களும் தங்கள் குழந்தைகளுக்கு போதுமான அளவிற்கு பாலூட்ட வேண்டுமாயின் சாதாரண பெண்கள் உட்கொள்வதை விட நாலு மடங்கு சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும்.

ஆகவே எதிர்காலத்தில் நாம் போசாக்கின்மையை தகர்த்து எறிவதற்கு பின்வருவனவற்றை நடைமுறைப் படுத்தவேண்டும்;

01. அறியாமை, மூடநம்பிக்கைகளில் வளர்கின்ற மக்களுக்கு அவற்றைப் போக்கும் விதத்தில் அறிவுரைகள், கருத்தரங்குகள் அடிக்கடிவைத்து மனதில் நம்பிக்கையை ஏற்படுத்துதல்.
02. கர்ப்பவதிகளுக்கான மருத்துவ கண்காணிப்பைச் சீராக்குதல்.

இங்கு அரசுசார்பற்ற, அரசு ஊடாக சுகாதார தொண்டர்கள் கர்ப்பவதிகளுக்கான சிகிச்சை நிலையத்தில் வைத்து சீராக சிகிச்சை பெறுவதற்குரிய காரணங்கள், முக்கியத்துவங்கள் போன்றவற்றுடன் அவர்களின் உணவு, சுகாதார, பழக்கவழக்கங்கள், குழந்தையின் வளர்ச்சிக்கு தேவையானவை பற்றியும் கருத்துக்களை தெரிவிப்பது

தையின் எந்தெந்த மாதத்தில் போட வேண்டும் என்பது பற்றியும் தெளிவாக சொல்ல வேண்டும்.

06. உள்ளூர் உற்பத்திகளை கொண்டு எவ்வாறு நிறையுணவைகுறைந்த செலவில் தயாரிப்பது பற்றிய விளக்கங்கள், செயல்முறை வகுப்புக்கள், கருத்தரங்குகள், அடிக்கடி வைத்துஅவர்களுக்கு உள்ளூர் உற்பத்தியின் பயனில் நம்பிக்கையை ஊட்டுதல்.
07. போசாக்குள்ள நிறையுணவை தயாரிப்பதற்கு தேவையான உள்ளூர் உற்பத்திப் பொருள்களை தமது வீடுகளிலே உற்பத்தி செய்வதற்கு வசதியாகமூலதனத்தை ஊக்குவிப்பு நிறுவனங்கள் ஊடாக பெற்றுக் கொடுத்தல், இதை

நிலையில் வாழ்கின்றனர். இம்மனப்போக்கை மாற்றியமைத்து வேறு ஏதாவது பிரயோசனமான தொழில்களை செய்து உழைத்து குடும்பத்தை பராமரிப்பதற்குரிய வழிவகைகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இறுதியாக இன்றைய போர்ச்சூழ்நிலையில் போசாக்கின்மையை ஏற்படுத்துகின்ற முக்கிய காரணங்களான உணவுப் பற்றாக்குறை, வருமானமின்மை, அறியாமை, அசட்டையீனம், மூடநம்பிக்கை போன்றவற்றை மேற்குறிப்பிட்ட முறைகளில் சுலபமாக தகர்த்தெறிந்து ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தை எம் மண்ணில் கட்டியெழுப்ப நிச்சயமாக எம்மக்களால் முடியும் என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

## வருடாந்த மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு மணியர் பதி சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலின்வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பதினைந்து தினங்கள் நீடிக்கும் உற்சவத்தையடுத்து 05-04-93 திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், இடம் பெறும் இந்த உற்சவகாலத்தில் தொடர்ந்து பத்துத்தினங்களும் 'கந்தபுராணம்' என்னும் பொருள்பற்றி இந்துக்கல்லூரி ஆசிரியர் சிவகுமாரன்தொடர் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்

## இடர்ப்படி வழங்கப்பட்டது

(வடமராட்சி)

உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு ஆறுமாத இடர்ப்படி கொடுப்பனவுகள் நேற்றுமுதல் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. (யோ)

## சுயதொழில் முயற்சி ஊக்குவிப்பு

தமிழீழ கடற்புலிகள் பொருண்மிய மேம்பாட்டுக் கழக மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை சுயதொழிலை ஊக்குவிக்கும் வகையில் படித்த தொழில் தெரிந்த எட்டு யுவதிகளுக்கு தையல் இயந்திரங்கள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டன. (யோ)

## மகாகும்பாபிஷேகம்

(தொல்புரம்)

வட்டுக்கோட்டை தெற்கில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் அருள்மிகு முதலியார் பெருமானுக்கும், வைரவப் பெருமானுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

மேற்படி கும்பாபிஷேகம் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகித் தொடர்ந்து 45 நாட்கள் நடைபெறவுள்ள மண்டலாபிஷேகத்துடன் விஞ்ஞாபனம் நிறைவுபெறவுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 3. | வே. சிவபாதசுந்தரம் | சமரவாகு, உடுப்பிட்டி |
| 4. | செ. தயானந்தன் | 15ஆம் கட்டை, உடுப்பிட்டி |
| 5. | சி. அழகையா | தும்பளை வீதி, பருத்தித்துறை |
| 6. | சி.வ.கோபாலகிருஷ்ணன் | மாதனை, பருத்தித்துறை |
| 7. | சி. சாம்புசிவம் | திகிரி வளவு, புலோலி கிழக்கு, பருத்தித்துறை |
| 8. | ஆ. வேல்முருகு | தும்பளை வீதி, தும்பளை, பருத்தித்துறை |
| 9. | செ.விசாகசுந்தரம் | கந்தஉடையார் ஒழுங்கை, பருத்தித்துறை |
| 10. | அ. ஈஸ்வரதேவன் | ''கீதாஞ்சலி'', கரவெட்டி கிழக்கு, கரவெட்டி |
| 11. | க. பூபாலசிங்கம் | பெரியதோட்டம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி |
| 12. | ச. சிதம்பரநாதர் | கச்சாய் தெற்கு, கொடிகாமம் |
| 13. | க. தியாகராசா | கண்டி வீதி, மிருசுவில் |
| 14. | க. கனகசபை | மீசாலை வடக்கு, மீசாலை |
| 15. | த சபாநாயகம் | 11, தனன்கிளப்பு வீதி, சாவகச்சேரி |
| 16. | வ. சிவராசா | 9, புதிய சந்தை, சாவகச்சேரி |
| 17. | இ. சிவசுப்பிரமணியம் | நீர்வேலி |
| 18. | க. சண்முகநாதன் | குமரகோட்டம், பத்தமேனி, அச்சுவேலி |
| 19. | வே.தி.பாலசுப்பிரமணியம் | உரும்பராய் கிழக்கு, உரும்பராய் |
| 20. | கு. நல்லநாதன் | தேவாலய ஒழுங்கை, உரும்பராய் |
| 21. | க. கனகசபாபதி | ''வசந்தம்'' ஊரெழு கிழக்கு, சுன்னாகம் |
| 22. | எஸ். ரி. நாகராஜா | மல்லாகம் |
| 23. | வ. இரத்தினம் | சிறாப்பர் வளவு, அப்பாத்துரை வீதி, மல்லாகம் |
| 24. | நா. சரவணமுத்து | ''பிருந்தாவனம்'', தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை |
| 25. | அ. வே. ஞானரத்தினம் | டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் |
| 26. | சி. சிவனேசன் | கந்தரோடை, சுன்னாகம் |
| 27. | க. காசிப்பிள்ளை | 6, புனித அன்னா ஒழுங்கை, மானிப்பாய் |
| 28. | து. மகேந்திரன் | அதிகார் செல்லமுத்து வீதி, மானிப்பாய் |
| 29. | வி. இராசையா | தம்பையா பண்டிதர் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய் |
| 30. | து. சச்சிதானந்தன் | சுதுமலை தெற்கு, மானிப்பாய் |
| 31. | கா. செல்வரத்தினம் | சம்பந்தர் பிள்ளையார் கோவில் வீதி, ஆனைக்கோட்டை |
| 32. | செ. சந்திரசேகரா | 95, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் |
| 33. | நா. சத்தியமூர்த்தி | தாவடி, கொக்குவில் |
| 34. | அ. மாணிக்கவாசகம் | ஏ. பாலசுப்பிரமணியம் மே. பா. முத்தடிமட ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் |
| 35. | தே. தங்கராஜா | பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் |
| 36. | அ. பிரான்சிஸ் | 783, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் |
| 37. | அ. ஜோசெப் | 372, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம் |
| 38. | வே. குகதாசன் | 6 / 2, சந்தானா கோவில் வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம் |
| 39. | க. நாகேஸ்வரன் | 19 / 2 பி. ஏ. தம்பி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் |
| 40. | க. சி. நமசிவாயம் | 125, ஐயனார் கோவில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் |
| 41. | ★ மு. நவரத்தினம் | 276, அரசடி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் |
| 42. | செ. இராமநாதன் | 20, மணல்தரை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் |
| 43. | இ. இரத்தினராஜா | 35 / 2, விபுலாநந்தர்வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் |
| 44. | ஐ. சண்முகம் | 2 ஏ, மருதடி வீதி, யாழ்ப்பாணம் |
| 45. | அ. சந்தியாப்பிள்ளை | 211, பிரதான வீதி, யாழ்ப்பாணம் |
| 46. | ★ செ. சிவலோகநாதன் | 213 (477), கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம் |
| 47, | கே. தனபாலசிங்கம் | 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் |
| 48. | வி. ஸ்ரீஹரன் | 189, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் |
| 49. | ப. தனராஜா | 55, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் |
| 50. | செ. திலகநாதன் | 2, குமாரசாமி வீதி, யாழ்ப்பாணம் |
| 51. | வி. நா. தேவராஜா | 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் |

★ 41 ஆம், 46 ஆம் இலக்கங்களில்குறிப்பிட்ட உறுப்பினர்கள் அறிவுரைகளும் ஆலோசனைகளும் மட்டும் வழங்குவர்

211, பிரதானவீதி, யாழ்ப்பாணம் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சங்கம்

15.03.1993 (4528) (வடபகுதி)

# வீர வணக்கம்

## 1991 பங்குனி மாதம் சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட

# 82 மாவீரர்களுக்கு

# 2-ம் ஆண்டு வீர வணக்கம்

| இல. இயக்கப் பெயர் | சொந்தப் பெயர் | முகவரி | தோற்றம் | வீரச்சாவு |
|---|---|---|---|---|
| 01. கரும்புலி மேஜர் டாம்போ | கா. தயாபரன் | நாச்சிக்குடா, மன்னார். | 17-03-1967 | 19-03-1991 |
| 02. கப்டன் ஜெறோம் | மா. அந்தோனிதாஸ் | மருத்துவமனை வீதி, மன்னார். | 12-02-1967 | ,, ,, |
| 03. நளினி | சி. புவனேஸ்வரி | நகுலன்வீதி, மீசா. வட. கொடி. | 04-09-1971 | ,, ,, |
| 04. பஸ்ரியன் | அ. தேவராசன் | அடம்பன், மன்னார். | — | ,, ,, |
| 05. கனகன் | க. ரஞ்சித்குமார் | நேரியகுளம் வவுனியா. | 20-03-1975 | ,, ,, |
| 06. லெப். குட்டி | ரா. ஜெஸ்ரின் | மத்தியூஸ்வீதி, யாழ். | 01-07-1972 | ,, ,, |
| 07. லெப். குட்டி | க. தங்கராசா | ஐயங்கேணி ஏறாவூர் மட்டுநகர். | — | ,, ,, |
| 08. கப்டன் கஜன் | செ. விஜயராசா | வண்ணாங்குளம் அடம்பன், மன்னார். | 24-07-1967 | ,, ,, |
| 09. ஜெயசக்தி | யூடிற் ராதிகா குணரத்தினம் | செல்வபுரம், முல்லைத்தீவு. | 25-05-1976 | ,, ,, |
| 10. இளங்கோ | சா. கண்ணன் | 5ஆம் கட்டை, எருக்கலம்பிட்டி மன்னார். | 15-10-1972 | ,, ,, |
| 11. ஜின்னா | கா. கோபாலபிள்ளை | களுவாஞ்சிக்குடி, மட்டு. | 24-02-1964 | ,, ,, |
| 12. மேஜர் செட்டி/பிரதாப் | க. செல்வக்குமார் | பொன்னாலை, சுழிபுரம். | 03-03-1968 | ,, ,, |
| 13. 2-ம் லெப். நிலாரவி | ச. ஜெயசீலன் | முதலைக்குத்தி உயிலங்குளம், மன்னார். | 26-07-1972 | ,, ,, |
| 14. சுந்தர் | செப. மரியதபேந்திரன் | சீனன்குடா, திருமலை. | 12 10-1971 | ,, ,, |
| 15. பூபால் | ஞா. வடிவேல் | நாநாட்டான், மன்னார். | 06-05-1971 | ,, ,, |
| 16. லெப். வாணி | செ. சிவராணி | கச்சாய்வீதி, சாவகச்சேரி. | 18 10-1973 | ,, ,, |
| 17. காவேரி | வை. நிரஞ்சினி | பொன்மணிநிலையம், அல்வாய் வடக்கு. | 19-06-1972 | ,, ,, |
| 18. 2ஆம் லெப். ராஜி | ந. சுரேஸ்குமார் | தேவாலய வீதி, சங்கானை. | 28 08-1971 | ,, ,, |
| 19. கப்டன் மொறிஸ் | ச. தவராசா | இடைக்குறிச்சி, வரணி. | 21-03-1972 | 20-03-1991 |
| 20. லெப். ஜொனி | க. சக்திவேல் | புலோலி தெற்கு பருத்தித்துறை. | 17-09 1973 | ,, ,, |
| 21. 2ஆம் லெப். ரஞ்சித்தாத்தா | க. குணபாலசிங்கம் | பேராலை, பளை. | 19-10-1964 | ,, ,, |
| 22. 2ஆம் லெப். அன்ரனி | து. அகிலன் | முள்ளானை, இளவாலை. | 20-06-1972 | ,, ,, |
| 23 சிவசங்கர் | அ. இராஜேந்திரகுமார் | சூரியாவெளி, நாவாந்துறை. | 25-09 1972 | ,, ,, |
| 24. திவாகரன் | டா. யோ. சாள்ஸ் | தாமரைக்குளம், அடம்பன், மன்னார். | 12-03-1974 | ,, ,, |
| 25. லெப். நாதன் | தி. திவானந்தன் | இத்தாவில், சதாபுரம் பளை. | 01-03-1970 | ,, ,, |
| 26. 2 ஆம் லெப். சதா | மேரிகியூராதேவராசா | சந்திஒழுங்கை,நறுவிலடி வல்வெட்டித்துறை. | 16-07-1970 | ,, ,, |
| 27. 2 ஆம். லெப். அம்பி | நா. கனகரஞ்சன் | புத்தூர் கிழக்கு, யாழ். | 05-03-1971 | ,, ,, |
| 28. அனோல்ட் | சி. குகன் | பறவைக்கொத்தான் வீதி, ரம்பைக்குளம். | 04-12-1968 | ,, ,, |
| 29. மரியநாயகம் | சி சின்னத்துரை | 1 ஆம் வட்டாரம், புங்குடுதீவு | 14-07-1971 | ,, ,, |
| 30. டெனின் | வெ சிவஞானரூபன் | புளியங்கூடல், ஊர்காவற்றுறை. | 23-10-1968 | ,, ,, |
| 31. சசிக்குமார் | சி. பத்மநாதன் | குமுழமுனை, மணலாறு | 16-05-1970 | ,, ,, |
| 32. மேஜர் ரஞ்சன் / சித்தப்பா | செ. தயாளன் | தம்பசிட்டி, பருத்தித்துறை. | 17-03-1968 | ,, ,, |
| 33. சூரி | — | வன்னி. | — | ,, ,, |
| 34. லெப். தர்சன் / புலவர் | யோ. செந்தூரன் | ஸ்ரீதரன்வீதி, வல்வெட்டித்துறை. | 05-05-1973 | ,, ,, |
| 35. லெப். சோமன் | வி. ராசேந்திரன் | கல்வயல், சாவகச்சேரி | 02-11-1975 | ,, ,, |
| 36. அனிட்டா | வை. உதயரஞ்சினி | காளிகோவிலடி, கொக்குவில் கிழக்கு. | 16-12-1976 | ,, ,, |
| 37. லெப். கலா | இ. வசந்தி | கடற்சேனை, மூதூர். | 08-08-1972 | ,, ,, |
| 38. கயா | த. பவானி | புன்னாலைக்கட்டுவன் வடக்கு. | 16-10-1971 | ,, ,, |
| 39. 2 ஆம் லெப். காந்தராசா | நா. ஜெயகுமார் | பொலிகண்டிகிழக்கு, வல்வெட்டித்துறை. | 25-03-1974 | ,, ,, |
| 40 சிறி | த. நந்தகுமார் | சூராவத்தை, சுன்னாகம். | 16-06-1973 | ,, ,, |
| 41. விஸ்ணு | க. நித்தியானந்தம் | வியாபாரிமூலை, பருத்தித்துறை. | 20-09-1974 | ,, ,, |
| 42. மேஜர் சதா | ந. திலீப்குமார் | வரணி வடக்கு. | 17-01-1971 | 21-03-1991 |
| 43. லெப. நேதாஜி | இ. மங்களேஸ்வரன் | அரசடிவீதி, நல்லூர். | 17-02-1972 | |




## காணவில்லை

விஜயரெட்ணம் உமாசங்கர். இவரைக் கடந்த 20-8-1991-ல் இருந்து காணவில்லை. ஐயங்கேணி, 4-ம் குறிச்சி ஏறாவூரை பிறப்பிடமாகக் கொண்டவர். வயது 21. இவரைத் தெரிந்தவர்கள் கீழேயுள்ள விலாசத்திற்கு தகவல் தரவும். வி. ஜெயபாலசிங்கம், இல. 397, நாவலர் றோட், 4ஆம் சந்தி, யாழ்ப்பாணம்.

(4517)

தகவல்:- விஜயநாயகி (தாய்)

திருக்கோணமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்களின் வளர்ச்சிக்காக,

நவாலியூர் சி. என். செல்லத்துரையின்

**★ தாயக மண் ★** நாடகம்

(சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் ஆதரவில்)

காலம்:- **27-03-1993** பி.ப. 3.30 மணி

இடம்:- யா. இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

நுழைவுச் சீட்டுக்கள் மண்டப வாயிலில்

[4531]

சில்லாலை

## அத்தனாசியார் பிரதம வைத்தியசாலை

புதிய இடம்:- 124, ஆடியபாதம் வீதி, நல்லூர்.
(கல்வியங்காடு சந்தியிலிருந்து நாயன்மார்கட்டு பக்கமாக 100 மீற்றர்)
(S. சுப்பிரமணியம் கொம்பனீ முன்பாக)
சிகிச்சை நேரம்:- காலை 7.00 மணி- 1.00 மணி
பிற்பகல் 3.30 மணி- 6.00மணி
(ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் லீவு நாள்)

சில்லாலையில் பெற்றுக் கொண்ட அதே தரத்தில் சகல எண்ணெய் வகைகளையும், மருந்து வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

(4525)

வைத்திய கலாநிதி
எமில் அத்தனாசியார்


காரைநகர் பல நோக்கு கூட்டுறவு சங்கம் (வரைவுள்ளது)

யாழ்ப்பாணம்

## அறிவித்தல்

எமது சங்கம் இடம்பெயர்ந்து வந்ததால் சில ஆவணங்களை எடுத்து வரவில்லை. மேலும் எடுத்து வரப்பட்ட ஆவணங்களைக் கொண்டு 31. 12. 92 முடிய தயாரிக்கப்பட்ட அங்கத்தவர் பட்டியல் எமது வழக்கம்பரை கிளைகளில், யாழ்ப்பாணம் - ஓட்டுமடம் கிளையிலும் வைக்கப்பட்டிருக்கிறது இதில் ஏதும் சேர்க்க வேண்டியிருந்தால் அவற்றை சேர்ப்பதற்கும் தங்கள் பங்குத்தொகைகளை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களை சமர்ப்பித்து பங்குத்தொகைகளை, அங்கத்துவத்தையும் 27- 03- 93க்கு

| | | | | |
|---|---|---|---|---|
| 43. லெப. நேதாஜி | இ. மங்களேஸ்வரன் | அரசடிவீதி, நல்லூர். | 17-02-1972 | ,, ,, |
| 44. 2 ஆம் லெப். சுமன் | மு. கேதீஸ்வரன் | நல்லூர், பூநகரி | 12-06-1970 | ,, ,, |
| 45. சத்தியமலர் | டே. தேவமலர் | தளவாய்செங்கலடி, மட்டு. | — | |
| 46. பாணன் | கா. குணபாலன் | திருக்கேதீஸ்வரம், மாந்தை, மன்னார். | 27-03-1971 | ,, ,, |
| 47. கப்டன் அப்பன் | ச. சிறிதரன் | தச்சன்தோப்பு, கைதடி. | 30-11-1972 | ,, ,, |
| 48. லெப். கஸ்ரோ | ந. செந்தூரன் | பெருமாள் கோவில் ஒழுங்கை, யாழ். | 08-11-1971 | ,, ,, |
| 49. 2 ஆம் லெப். நாதன் | ப. சுந்தரராஜ் | ஜெயபுரம்பல்லவராயன்கட்டு,கிளிநொச்சி. | 24-05-1972 | ,, ,, |
| 50, சயந்தன் | செ. லோகேஸ்வரன் | நவாலி யாழ். | 06-04-1971 | ,, ,, |
| 51. சாந்தன் | செ. செல்வகுமார் | சந்தைமேற்கு ஒழுங்கை,பருத்தித்துறை. | 28-06-1973 | ,, ,, |
| 52. லெப். சயிமன் | நா. மோகனரூபன் | சயிமன் வீதி, கொக்குவில் மேற்கு. | 22-05-1971 | ,, ,, |
| 53. பீர்றர் | ச. சிறிஸ்காந்தராசா | வேம்படி வீதி, மானிப்பாய். | 23-06-1973 | ,, ,, |
| 54. கோணேஸ் | சி. அன்னலிங்கம் | வன்னியசிங்கம் வீதி, ஆவரங்கால். | 24-08-1974 | ,, ,, |
| 55. கலைச்செல்வன் | து. மணிவண்ணன் | சிவன்கோவிலடி, குணநாதன் வீதி, யாழ். | 06-01-1973 | 22-03-1991 |
| 56. கப்டன் பாஸ்கர் | செ. ரவீந்திரன் | பள்ளங்கோட்டை, நானாட்டான். | 17-02-1966 | ,, ,, |
| 57 லெப். சுகந்தன் | இ. யோகேந்திரன் | நறுவிலிக்குளம், மன்னார். | 16-01-1970 | ,, ,, |
| 58. லெப். டெனிக் | க. குகதாசன் | மிருசுவில் வடக்கு, கொடிகாமம். | 05-09-1969 | ,, ,, |
| 59. உசான் | ச. யோ பெ. தேவநாயகம் | புலோப்பளை, பளை. | 02-02-1972 | ,, ,, |
| 60 லெப். சுரேந்தர் | பொ. பாலதாஸ் | பரிகாரிகண்டல், முருங்கன்-மன்னார். | 29-06-1969 | ,, ,, |
| 61. லெப். பரணி | செ. தவராசா | கெற்பேலி, மிருசுவில். | 01-01-1974 | ,, ,, |
| 62. லெப். றொபேட் | கு. குலமோகன் | உதயாபதி, அளவெட்டி தெற்கு. | 12-07-1970 | ,, ,, |
| 63. 2ஆம் லெப். பஷ்ரி | தி. ஜேசுதான் | வங்காலை, மன்னார். | 09-01-1972 | ,, ,, |
| 64. சூரியகுமார் | க. லிங்கேஸ்வரன் | புத்தூர் மேற்கு. | 24-01-1972 | ,, ,, |
| 65. மது | இ. சுரேஸ் | மணற்காடு, குடத்தனை. | 26-03-1974 | ,, ,, |
| 66. ஜெயிலான் | இ. மொறிஸ் | கிளாலி. | 26-03-1975 | ,, ,, |
| 67. லெப். சங்கர் | ரவிசங்கர் | குமுழமுனை, மணலாறு. | — | ,, ,, |
| 68. ராஜி | செ. கு. சிவநாதன் | மன்னார். | 08-07-1976 | ,, ,, |
| 69. பப்பா | இ. பத்மலிங்கம் | மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய். | 02-02-1964 | ,, ,, |
| 70 பரமசிவம் | கி. வசந்தகுமார் | மட்டுவில், நாடு கிழக்கு பூநகரி. | 23-09-1974 | ,, ,, |
| 71 பாலசுந்தரம் | மு. சிவலிங்கம் | விபுலானந்த வீதி, வாழைச்சேனை. | — | ,, ,, |
| 72 சேகரன் | த. இமானுவேல் | முழங்காவில், மன்னார். | 27-08-1973 | ,, ,, |
| 73. சந்திரகாந் | கா. ராஜி | தம்பகாமம், திருமலை. | 22-07-1970 | ,, ,, |
| 74. இரத்தினம் | அ. மரியநாயகம் | முருங்கன்பிட்டி, மன்னார். | 25-10-1974 | ,, ,, |
| 75. ஜெரோமி | ந. சகாயராசா | சிறுநாவற்குளம், மன்னார். | 01-01-1975 | ,, ,, |
| 76. மதனன் | மு. கமலகாசன் | கச்சாய் வடக்கு, கொடிகாமம். | 17-09-1975 | ,, ,, |
| 77. கலாதரன் | வி. சிவனேஸ் | திருக்கோணமலை. | 01-10 1971 | ,, ,, |
| 78. ராவ் | கோ. பத்மநாதன் | கற்பிட்டி, புத்தளம். | 02-05-1972 | ,, ,, |
| 79. உத்தமன் | ப. வேலு | தலவாக்கொல்லை. | 08-06-1971 | ,, ,, |
| 80. மணிமுடி | பா. கிரிதரன் | டச்வீதி, அளவெட்டிமத்தி. | 19 03-1974 | ,, ,, |
| 81. பீற்றர் | தெ. தவராசா | அல்லிப்பளை, பளை. | 23-04-1965 | ,, ,, |
| 82. அசோக் | க. மோகனதாஸ் | திமிலதீவு, புதூர் - மட்டு. | — | 28-03-1991 |

**பச்சிலைப்பள்ளி வாகன உரிமையாளர் சங்கம் பளை.**

(சி, 6228)

பங்குத்தொகைகளை, அங்கத்துவத்தையும்27- 03- 93க்கு முன்னர் உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

க. நடராசா
செயலாளர்


[சி-6239]

கா. சோமசுந்தரம்
தலைவர்

---

## 2-ம் ஆண்டு
## கண்ணீர்! அஞ்சலி

தாயின் மடியில்
08 – 11 – 1971



தாயக மீட்பில்
21 – 03 – 1991

## வீரவேங்கை கஸ்ரோ
## (நடேசபிள்ளை செந்தூரன்)

சிலாவத்துறை தன்னிலே பகைவரை அழித்திட
வீரவேங்கையாய் பாய்ந்து நீ மாவீரனாகி
ஈராண்டு ஓடி மறைந்தாலும் ஐயா!
உருண்டு ஓடுகின்றதே உன்நினைவு வெள்ளம்.

சிலாவத்துறை இராணுவமுகாம் தாக்குதலின்போது வீரச்சாவடைந்த இவருக்கும், இவருடன் மறைந்த வீர வேங்கைகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

18, பெருமாள் கோயில்,
தெற்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (4497)

உன்நினைவால் வாடும்
அப்பா, அம்மா, பெரியம்மா,
தங்கை, தம்பி.

### சிந்தனைக்கு

உலோபி, சிறுதுணியை மிச்சப்படுத்துவதற்காக உடையையே கெடுத்துவிடுவான்

வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21 - 03- 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## ஐ. தே. கட்சியும் மாகாண சபைகளும்

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணசபை தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கும், 8 ஆம் திகதிக்கும் இடையில் தாக்கல் செய்யலாம் எனவும், இவ் ஏழு மாகாண சபைக்குமான தேர்தல்கள் ஒரே நாளில் நடைபெறும் எனவும் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். இத் தேர்தல் மே மாதம் 13 ஆம் திகதிக்கும் ஜூன் மாதம் 3ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறும் என வேறு சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வேளையில் இம்மாகாண சபை அமைப்பையே கலைத்து விட ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்காக அதிகரித்தஅரசாங்கச்செலவீனங்களைக் காரணம் காட்ட முற்படுவ தாகவும் அறிய முடிகின்றது. இதேவேளை பாராளுமன்றத் தெரிவுக் குழுவைக் கொண்டே மாகாணசபைகளைக் கலைத்து விடவும் முற்படுவதாகவும் அறிய முடிகின்றது. இது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முற்பட்ட தெரிவுக் குழுவின் நோக்கத்திற்கு முற்றிலும் எதிர்மாறானதாகும்.

ஆனால் அரசாங்கம் மேற்கொள்ளும் இம் முயற்சி எந்தளவிற்கு அமுலுக்கு வரும், எந்தளவிற்கு மாற்றத்திற்கு உள்ளாகும் என்பவை எல்லாம், தற்பொழுது திட்டவட்டமாக தெரிவிக்க முடியாத வேளையிலும் அரசாங்கத்திற்கு 'இவ்வாறாக ஏற்பட்டுள்ள சிந்தனையானது முற்றாக இன ஒடுக்குமுறைப்பாற்பட்டது என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணவென இந்தியாவும் சிறிலங்காவும் சேர்ந்து உருவாக்கிய மாகாணசபை என்ற அமைப்பிற்கு வடக்கு - கிழக்கில் தேர்தல் நடைபெறாமல் வெளி மாகாணங்களில் தேர்தல் நடைபெறுவது வேடிக்

# மசூதி இடிக்கப்பட்டதற்கு நரசிம்மராவே காரணம்

### -ஜெயலலிதா குற்றச்சாட்டு

அயோத்தி பாபர் மசூதி இடிக்கப்பட்டமைக்கு பிரதமர் நரசிம்மராவே காரணம் என முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று தமிழகசட்டப்பேரவையில் பகிரங்கமாக தெரிவித்தார். மசூதியை காக்க எல்லா அதிகாரங்களையும் தேசிய ஒருமைப்பாட்டு குழு பிரதமருக்கு அளித்திருந்தது என்றும் அவர் குறிப்பிட்டு இதன் காரணமாக மசூதி இடிப்பிற்கு நரசிம்மராவைத் தவிர வேறு எவரும் காரணமல்ல என்றார்.

ஒருமைப்பாட்டுக் கூட்டத்தில் கரசேவை நடத்துமாறு நாம் பேசியதாலே மசூதி இடிக்கப்பட்டது என தொடர்ந்து காங்கிரஸ் கட்சி குற்றஞ்சாட்டினால் ம்சூதி இடிப்பிற்கு நரசிம்மராவே காரணம் என நம்மாலும் கூறமுடியும் என உணர்ச்சிவசப்படக் கூறினார் ஜெயலலிதா.

சட்டப்பேரவையில் இன்னுமொரு தடவை குறுக்கிட்டு முதலமைச்சர் ஜெயலலிதா பேசிய போது, தமது கட்சிக்கு கூடுதல் பாரமாக இருந்த காங்கிரசை கழட்டிவிட்டு விட்டோம். பி. ஜே. பியுடனான உறவுக்கு அவசியமோ அவசரமோ இல்லை என்றும் கூறினார்

பி.ஜே.பி.சென்னையில் நடத்தவுள்ள கூட்டத்தை தடைசெய்யுமாறு எதிர்க்கட்சி உறுப்பினர் சிலர் சட்டப்பேரவையில் ஜெயலலிதாவைக் கோரியபோது, பி. ஜே. பி கூட்டத்தை தடைசெய்ய முடியாது. பி. ஜே. பி தடைசெய்யப்பட்ட கட்சியுமல்ல என ஜெயலலிதா அப்போது பதிலளித்தார்.

## சென்னையில் முதல்வருடன் தேர்தல் கமிஷனர் பேச்சு

[சென்னை]

இந்தியாவின் தலைமைத் தேர்தல் அதிகாரியான டி. என். சேஷன் நேற்றுசென்னையில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினார். இந்தப் பேச்சுக்களின் விபரம் எதுவும். வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழக முதல்வர் சட்டப்பேரவை உறுப்பினராக பதவி வகிக்க தகுதியற்றவர் என்பதைச் சுட்டிக்காட்டும் மகஜர் ஒன்றை தமிழக நல்லாட்சி இயக்கத் தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தமிழக ஆளுநரிடமும், உச்சநீதி மன்றத்திலும் தாக்கல் செய்திருக்கின்றமைதெரிந்ததே.

## காங்கிரசின் கூற்று சந்தர்ப்பவாத அரசியல்

### அ. தி. மு. க. உறுப்பினர் தெரிவிப்பு

தமிழகத்தில் விடுதலைப்புலிகள் நடமாட்டம் இருப்பதாக அடிக்கடி காங்கிரஸ்கட்சியினர் கூறிவருவது சந்தர்ப்பவாத அரசியல் என அ. தி. மு. க. உறுப்பினர் வேலையா சட்டப் பேரவையில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

## விசாரணைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது

### - பி. வி. நரசிம்மராவ்

[டில்லி]

பம்பாய் மற்றும் கல்கத்தா குண்டுவெடிப்புகள் பற்றிய விசாரணைகள் சரியான திசையில், சிறப்பாக முன்னேறி வருகின்றன என்று இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்று பெங்களூரில் செய்தியாளரிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் மகாராஷ்டிராவிலும், மேற்கு வங்காளத்திலும் நிலைமை கட்டுக்குள் இருப்பதாகவும்' அந்தந்த மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

## பீகார் ரயில் பாதையில் வெடிகுண்டு மீட்பு

பீகாரில் புகையிரதப்பாதையில் ஒரு வெடிகுண்டு கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து ராஞ்சிக்கான ரயில் சேவைகள் நேற்று கட்டுப் படுத்தப்பட்டது. பீகார் மாநிலத்தில் ஜார்க்கண்ட் தனி மாநிலம் கோருபவர்கள் பொருளாதார முற்றுகைப் போராட்டம் ஆரம்பித்திருப்பதும் கடந்த ஐந்து நாட்களாக இப்போராட்டம் நீடித்து வருவதும் தெரிந்ததே.

## இந்திய - ஐரோப்பிய உறவை பலப்படுத்த உதவுவோம்

### - போர்த்துக்கல் தூதுவர்

[டில்லி]

இந்தியாவிற்கும் ஐரோப்பிய சமூகத்திற்கும், இடை ளித்த போது போர்த்துக்கல் தூதுவர் மேற்கொண்ட உறுதிமொழியை வழங்கியுள்

### பம்பாய் குண்டுவெடிப்பு மேலும் இருவர் கைது

(டில்லி)

பம்பாய் நகர குண்டுவெடிப்பு சம்பவங்கள் தொடர்பாக மேலும் இருவர் பம்பாய் பொலீசாரால் கைது செய்யப் பட்டுள்ளனர். டுபாய் நாட்டிற்குசென்றிருக்கும்மேமொன் குடும்பத்தினருடன் தொடர்புள்ளவர்கள் என்று கூறப்படும் இவ் இருவரும் சம்பந்தப் பட்டிருப்பதாகவும், மேலும் பலர் கைதாகலாம் எனவும் பொலீசார் கூறியுள்ளனர்.

### உப்சாலாவில் கருத்தரங்கு

'தென் ஆசியப் பிராந்தியத்தில் அரசுகளின் தோற்றமும், அமைப்புக்களின் கட்டுமானமும்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றை நடத்த சுவீடனின்உப்சாலாபல்கலைக் கழகம் முன்வந்துள்ளது.

இக் கருத்தரங்கில் மொழியும், அரசுகளின் தோற்றமும்; மதமும், அரசுகளின் தோற்றமும்; அரசுகளின் தோற்றத்துக்கான அடிப்படைத் தத்து

## தாய்க் குலத்தின் திலகம்!

வானத்தைக் கிழித்து
வந்த ஒளிக்கீற்று - புதுத்
தாகத்தைச் சுமந்து
தமிழுக்காய் எழுந்ததுவோ?

மட்டக் களப்பினிலே
மாமாங்கப் பதியினிலே
சுட்டெரிக்கும் சூரியனின்
சுடரொளி வீழ்ந்ததுவோ?

எங்கள் விழியிரண்டாய்
இருந்தவெம் அன்னையவள்
வெங்கொடுமைப் படைக்கெதிராய்
வீறுடனே எழுந்தனளோ?

கைப்பிடித்த கணவனையும்
கனிவான மக்களையும்
மெய்ப்பொருளாம் நாட்டுக்காய்
பிரிவதற்குத் துணிந்தனளோ?

சண்டித் தனம்புரியும்
சதிகார இந்தியாவை
கண்டிக்கத் தாய்மனது
கருணைவழி நாடியதோ?

தளரா உறுதியுடன்
தாய்க்குலத்தின் திலகமது
திலீபன் வழிதொடரத்
திட்டமதைப் போட்டதுவோ?

சாவுக்கு அஞ்சுவது - எங்கள்
சரித்திரத்தில் இல்லையென்று
கூவும் குயில் ஈழத்
தென்திசையில் முழங்கியதோ?

★ ★

- மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## அன்னைபூபதி நினைவு வடமராட்சியில் அனுட்டிப்பு

(வடமராட்சி)

தியாகச்சுடர் அன்னைபூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள், வடமராட்சி பகுதி எங்கும் உணர்வு பூர்வமாக பூசிக்கப்பட்டு வருகின்றது. வடமராட்சி - கிழக்கு உள்ளடங்கலாக பல இடங்களிலும் வீதியோரங்களில் குடிசைகள் அமைத்து சிவப்பு, மஞ்சள் வெள்ளை நிறங்களால் அலங்கரிக்கப்பட்டு அன்னை பூபதியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு பூசிக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது

வீதியோரங்கள், சந்திகள் கேந்திரநிலையங்கள் மக்கள் கூடும் இடங்கள், வர்த்தக நிலையங்கள், தமிழீழ விடுதலைப்புலிகள் காரியாலயங்கள், பாசறைகள், முகாம்கள் மற்றும் அகதிகள் முகாம்கள் அரச அலுவலக கட்டடங்கள் வடக்கு-கிழக்கு மீனவர் சங்கங்கள் காவல்துறை நிலையங்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சனசமூக நிலையங்கள் மாதர் சங்கங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகிய இடங்களில் தியாகச் சுடர் அன்னைபூபதியின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு சுடர் ஏற்றி மலர் இட்டு, மலர்மாலையிட்டு வணங்கப் படுகிறது

வீதிகள் தெருக்கள் எங்கும் சிவப்பு மஞ்சள் நிறங்களால் அலங்கரிக்கப்பட்டும் காணப் படுகின்றன. வல்வெட்டித் துறை உடுப்பிட்டி தொண்டமனாறு பருத்தித்துறை நெல்லியடி நாகர்கோயில் குடத்தனை மற்றும் பகுதிகளிலும் இவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டும் அலங்கரிக்கப் பட்டும் காணப்பட்டன.

ஐந்தாம் ஆண்டு இறுதி நாள் இரண்டு தினங்கள் கூட்டங்கள் நடாத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன (யோ)

எதுவுமில்லை.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணவென இந்தியாவும் சிறிலங்காவும் சேர்ந்து உருவாக்கிய மாகாணசபை என்ற அமைப்பிற்கு வடக்கு - கிழக்கில் தேர்தல் நடைபெறாமல் வெளி மாகாணங்களில் தேர்தல் நடைபெறுவது வேடிக்கையானதே. இதேவேளை 'அரசாங்கம் வடக்குக் கிழக்கில் தேர்தல் நடத்த முற்பட்டிருந்தாலும் அது சாத்தியமாகுமா என்றால் அதுவும் இல்லை என்றே கூறமுடியும். தமிழ் மக்களும் விடுதலைப் புலிகள் இயக்கமும் முன்னரே மாகாணசபைத் திட்டத்தை நிராகரித்து விட்டமையே இதற்குக் காரணமாகும்.

ஆனால் அரசாங்கம் மாகாணசபைகளைக் கலைத்துவிடலாம் என எண்ணுவது தமிழரின் பிரச்சினைத் தீர்விற்கென உருவாக்கப்பட்ட மாகாணசபை, தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு எதையும் காண்பதற்கு உதவமுடியவில்லை. இதனால் இச்சபை செயற்பாட்டில் பயன் ஏதுமில்லை, பெரும் செலவீடுதான் மிஞ்சுகின்றது என்ற நோக்கத்தினாலல்ல. அவ்வாறாயின் வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்ட போதே மாகாணசபை அமைப்பையும் அரசாங்கம் கலைத்திருக்க வேண்டும் ஆனால் காரணம் அதுவல்ல. அரசாங்கத்தின் சிந்தனையிலுள்ள இனவாதப்போக்கும், எதிர்காலத் தேர்தலில் வெற்றிபெறவேண்டுமென்ற குறுகியஅரசியல் நோக்கமுமேகாரணமாகும்.

மாகாணசபை அமைப்பை அழிப்பதன் மூலம் பிரேமதாசா அரசாங்கம் வடக்குக் கிழக்கை ஏதோ ஒரு வகையில் இணைத்து வைத்திருந்ததாகக்கூறப்பட்டமாகாணசபைஅமைப்பைக் கலைத்துவிட முற்படுகின்றது. இதன் மூலம் தமிழருக்கென வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை பறித்துவிட்டதாக தெரிவித்து எதிர்காலதேர்தல்களில் வாக்குவேட்டையில் இறங்கலாம். அதாவது சிங்களப் பேரினவாதத்தை திருப்திப்படுத்திவிடலாம் என அரசாங்கம் எண்ணுகின்றது.

பிரேமதாசா அரசாங்கத்தின் இந்நோக்கமானது தமிழரின் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாட்டை வெளிப்படுத்துபவையாகவே உள்ளது.அதாவதுதமிழரின் தேசிய இனப்பிரச்சினையை பிரேமதாசா அரசாங்கம் எப்பொழுதும் தீர்த்துவைக்கப் போவதில்லை. வழமை போலவே சிங்கள ஆட்சியாளர்கள் இனவெறியையே தமது அரசியல் மூலதனமாகப் பயன்படுத்த முற்பட்டுள்ளதையே இது காட்டுகின்றது.

# இந்திய - ஐரோப்பிய உறவை பலப்படுத்த உதவுவோம்

## - போர்த்துக்கல் தூதுவர்

[டில்லி]

இந்தியாவிற்கும் ஐரோப்பிய சமூகத்திற்கும், இடையிலான உறவை மேம்படுத்துவதில் இந்தியாவிற்கு உதவும் என்று போர்த்துக்கல் கூறியுள்ளது. நேற்று புதுடில்லியில் குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மாவைச் சந்தித்து தமது நியமனப்பத்திரங்களைக். கையளித்த போது போர்த்துக்கல் தூதுவர் மேற்கொண்ட உறுதிமொழியை வழங்கியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் ஐரோப்பிய சமூகத்தின் உறுப்பு நாடு என்ற வகையில் போர்த்துக்கல் இந்தியாவிற்கு இவ்விடயத்தில் ஒத்துழைப்பு நல்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

கருத்தரங்கு ஒன்றை நடத்த சுவீடனின்உப்சாலாபல்கலைக் கழகம் முன்வந்துள்ளது.

இக் கருத்தரங்கில் மொழியும், அரசுகளின் தோற்றமும்; மதமும், அரசுகளின் தோற்றமும்; அரசுகளின் தோற்றத்துக்கான அடிப்படைத் தத்துவங்கள்; தென்கிழக்காசியாவிற்கு, தென்ஆசியா ஒரு முன்மாதிரி; அரசுகளின் தோற்றத்திற்கான பொருளாதார அடிப்படைகள்; தென் ஆசியாவில் நிர்வாகமும், அதிகார வர்க்கமும் என்னும் தலைப்புகளில் உரையரங்குகள் நிகழவுள்ளன.

தலைப்புலிகள் காரியாலயங்கள், பாசறைகள், முகாம்கள் மற்றும் அகதிகள் முகாம்கள் அரச அலுவலக கட்டடங்கள் வடக்கு-கிழக்கு மீனவர் சங்கங்கள் காவல்துறை நிலையங்கள் பல நோக்குக் கூட்டுப்பட்டும் காணப்பட்டன.

ஐந்தாம் ஆண்டு இறுதி நாள் இரண்டு தினங்கள் கூட்டங்கள் நடாத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன (யோ)

இலங்கைத் தமிழ் அகதிகள்

# முகாமைவிட்டு வெளியேற தமிழகத்தில் தடை

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களிலிருந்து வெளியேறுவது தடை செய்யப்படும் என்று தமிழகப் பொலீசார் எச்சரிக்கை செய்துள்ளனர். அவ் எச்சரிக்கையில் மேலும் இலங்கைத் தமிழ் அகதிகள் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவேண்டும் என்றும், இல்லையேல் முகாம்களிலிருந்து வெளியேறுவது முற்றாகத் தடை செய்யப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

# கூட்டணி உறவு முறிந்தமை துரதிட்ட வசமானது

## - மத்திய அமைச்சர் தெரிவிப்பு

[சென்னை]

தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு,க. - காங்கிரஸ் கட்சிகளுக்கிடையேயான கூட்டணி உறவு முறிந்து போனமைக்கு தமிழக முதல்வர் ஜெயலலிதாவே காரணம் என்று மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், கூட்டணி உறவு முறிந்து போனமை துரதிட்டவசமானது தான். ஆனாலும் கூட்டணி உறவுக்காக தமது கட்சி தாழ்ந்து போகாது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை தமிழக மாநில காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக் கூட்டம் நேற்றுக்காலை சென்னையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி. மூத்த தலைவர் கருப்பையா மூப்பனார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# அரசியலில் மதம் அரசு அனுமதி மறுப்பு

(டில்லி)

அரசியல் ஆதாயங்களுக்காக மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்கு எவரையும் அரசு ஒருபோதும் அனுமதிக்காது. பஞ்சாப் மாநில முதல்வர் பியாந்த்சிங் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் மாநிலத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### கடலில் வீழ்ந்த மர்மநெருப்பு

[டில்லி]

கேரள தலைநகர் திருவனந்தபுரத்திற்கு தெற்கே நெருப்புப் போன்ற ஒரு பொருள் நேற்று முன்தினம் மாலை கடலினுள் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதிலிருந்து வெப்ப அலைகள் எழுந்தபடியிருந்ததாகவும் இதனால் மக்கள் மத்தியில் பீதிநிலை காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பொருளின் எச்சங்களை ஆராய்வதன் மூலமே பொருளை என்னவென்று அடையாளம் காணமுடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# ஐரோப்பாவிற்கு எதிராக அமெரிக்காவர்த்தகத்தடை?

(வாஷிங்டன்)

ஐரோப்பிய குடும்ப சமூக நாடுகளுக்கு எதிராக திங்கட்கிழமை முதல் விதிக்க இருந்த பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா ஒத்திவைத்துள்ளது. இந்த மாதப் பிற்பகுதியில் அமெரிக்க அரசின் தூதுக்குழுவொன்று பிரஸ்ஸல்சில் பேச்சு நடத்திய பின்னர் இந்த தடைகளை விதிப்பது பற்றி முடிவு செய்யப்படும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. கான்ட்ராக்ட்டுகள்விஷயத்தில் ஐரோப்பிய சமுதாய அமைப்பின் கொள்கை அமெரிக்கக் கம்பனிகளைப் பாதிப்பதாகக் கூறியே அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தப் பிரச்சினை ஒரு வாணிபப் போராக மாறும் ஆபத்து உருவாகிவருவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

# எண்ணெய்க் கப்பல் தீப்பிடித்தது

(லண்டன்)

வடகடலில் எண்ணெய்க் கப்பலொன்று வெடித்துத் தீப்பிடித்து எரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எண்ணெய்க் கப்பல் 10,000 தொன் எண்ணெய் மற்றும் 25 க்கும் அதிகமான மாலுமிகளுடன் வட கடலில் கப்பல் போக்குவரத்து அதிகமான பாதையில் பயணித்துக் கொண்டிருந்த போதே நேற்று மூன்தினம் தீப்பிடித்துக் கொண்டது.

# தமது நடவடிக்கை பற்றி பாராளுமன்றத்திற்கு விளக்க அதிபர் யெல்ட்சின் முயற்சி

[மாஸ்கோ]

ரஷ்யாவில் அதிபரின் அதிகாரத்தைக் குறைப்பதற்காக பாராளுமன்றம் மேற்கொள்ளும் முயற்சிக்கு எதிராக அதிபர் யெல்ட்சின் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள் பற்றி இன்று விளக்குவார் என்று தெரிய வருகிறது.

இதுபற்றி வெளிநாட்டமைச்சர் ஆந்த்ரே குரோசிக்கோவ் மேலும் கூறுகையில்; அதிபர் யெல்ட்சின் முன்வைக்க இருக்கும் திட்டங்கள், ஜனநாயக பூர்வமானவையாகவும், ஆக்க பூர்வமானவையாகவும், அமைதியை நிலைநாட்ட உதவுபவையாகவும் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

# ஈராக்-குவைத்திற்கு இடையே புதியஎல்லைவகுக்கப்பட்டது

(பக்காத்)

ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் ஈராக்கிற்கும் குவைத்திற்கும் இடையிலான கடலெல்லையைப் புதிதாக வரைந்துள்ளனர். இந்த புதிய எல்லை வகுப்பது தொடர்பாக ஐ. நா வின் அதிகாரிகள் மேலும் கூறுகையில்; இதன் மூலம் இப் பிராந்தியத்தில் அமைதிதொடர்ந்து பேணப்படும், இரு நாடுகளும் நன்மையடையவும் வழி ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர்.

இந்தப் புதிய எல்லையை குவைத் வரவேற்றுள்ள போதும் ஈராக் ஏற்றுக்கொண்டிருப்பதாக தெரியவரவில்லை.

ஈழநாதம்

### பம்பாய் குண்டு வெடிப்பு

# முஸ்லிம் சகோதரர்கள் டுபாயிலிருந்து தப்பினர்

(டில்லி)

பம்பாய்க் குண்டு வெடிப்புக்களுடன் சம்மந்தப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும் யாக்குப் மேமன் இஸ்மயில் மேமன் என்ற இரு முஸ்லிம் சகோதரர்களும் டுபாயை விட்டு வெளியேறிச் சென்றுள்ளனர்.

கடந்த புதன்கிழமையன்று தப்பிச் சென்ற இவர்கள் வளைகுடாவில் பெயர் தெரியாத இடமொன்றுக்குச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. இச்சகோதரர்களுடன் இவர்களது குடும்பத்தினரும் வெளியேறிச் சென்றதாக கூறப்படுகிறது இச் சகோதரர்களைப் பிடித்து தரும்படி இந்திய அரசு ஐக்கிய அரபு எமிரேற்றுகள் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்து சில மணிநேரத்துக்குள்ளாகவே இவர்கள் வெளியேறிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. இவர்களது தந்தை, மனைவி மற்றும் குழந்தை ஆகியோர் டுபாய் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றதை உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

அதேவேளை இந்த இரு முஸ்லிம் சகோதரர்களையும் டுபாய் பொலீசார் கைதுசெய்யாமல்இருந்தது ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக சர்வதேச விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

### சிலாவத்துறை முகாம் தாக்குதல்

## 82 மாவீரர்கள் நினைவு இன்று அனுஷ்டிப்பு

சிலாவத்துறை சிறிலங்கா இராணுவமுகாம்மீதான தாக்குதலின்போது வீரச்சாவடைந்த எண்பத்திரண்டு மாவீரர்களின் 2 ஆம் ஆண்டு நினைவு தினம் நாவற்குழியில் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நாவற்குழியில் மேற்படி மாவீரர்கள் நினைவாக அமைக்கப்பட்ட சரணாலயத்திற்கு அருகில் மாலை 5.30 மணிக்குப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளதாகத் தென்மராட்சி மாவீரர் செயற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

மேலும் இம்மாவீரர்கள் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு நாவற்குழி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நாவற்குழி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துக் கோயிலாக்கண்டி மக விஷ்ணு விளையாட்டுக்கழகம்மோதும்.

அத்துடன் இரவு ஏழு மணிக்கு நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அஞ்சலிக்கூட்டமும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல்துறை வட்டச்செயலகம் அறிவித்துள்ளது. (86)


## பற் சிகிச்சை நிலையம்

### "சென்றல்-கிளினிக்"

(எஸ். பி. சாமி அன்கோ கட்டிடம்),
யாழ். பஸ் நிலையம் அருகில்,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
பா. நேரம்: தினசரி ந.ப. 12 – பி.ப. 2 வரை
(ஞாயிறு மூடப்படும்) (4074)


### வீரவணக்கக் கூட்டம்

மூன்றாம் மாதங்களில் (மார்ச்) வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வலிகாமம் கோட்ட யாழ் வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் இன்று மாலை 7.30 மணிக்கு யாழ் மத்தி, கற்குளம் ஸ்ரார் சனசமூக நிலைய அருகில் நடைபெறும்.

விடுதலைப்புலிகளின் சிறப்புப்பேச்சாளர்கள் உரையாற்றவிருக்கும் இவ் வீரவணக்கக் கூட்டமுடிவில் விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (90)

### அடையாளம் காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற்கரையில் நேற்று முன்தினம் கரை ஒதுங்கிய சடலம் ஒன்று அடையாளம் காணப்பட்டது.

திருநெல்வேலி பாற்பண்ணையடியைச் சேர்ந்த குணம் வாசு என்பவரின் சடலமே அதுவென அடையாளம் காணப்பட்டுள்ளது.

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

எஸ். சிவசுப்பிரமணியம், 40/B/2 கந்தானை வீடமைப் புத்திட்டம் கண்டி. என்பவரது ஹற்றன் நெஷனல் வங்கியின் கண்டிக்கிளை வாடிக்கையாளர் சேமிப்புப் புத்தகம் ஒன்று சமீபத்தில் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கண்டெடுக்கப்பட்டு அரியாலை கொழும்புத்துறை சந்தோசம் வீதி (ஏ.வி. றோட்) இலக்கம் 75இல் இயங்கிவரும் வேலணை பிரதேச சபை ஆயுர்வேத இலவச வைத்தியசாலையில் திரு. நீ. யேசுரட்னம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. [90]

## பீரங்கிப் படகிலிருந்து அதிகாலையில் தாக்குதல்

(குருநகர்)

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் சிறிலங்கா கடற்படையினரின் பீரங்கிப் படகில் இருந்து யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டது.

பூநகரி - கல்முனைக்கும் மண்டைதீவுக்கும் இடைப்பட்ட கடல் பிரதேசத்தில் ரோந்தில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா கடற்படையினர் அதிகாலை திடீரென முகத்துவாரக் கரையை நோக்கி ஐந்துக்கும் மேற்பட்ட குண்டுகளை ஏவினர்.

அவை கடலில் வீழ்ந்து வெடித்த சத்தங்களைக் கேட்டு கரையோரப் பகுதி மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

ஐந்து நிமிடங்கள் நீடித்த தாக்குதலை அடுத்துரோந்துப் படகு அவ்விடத்தை விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் மண்டைதீவு சிறிலங்கா இராணுவ முகாம் பகுதியில் இருந்து குடாக்கடல் ஏரிப்பகுதியை நோக்கி வெளிச்சக் குண்டு ஏவப்பட்டதாகவும்,

இரவு முழுவதும் சிறிலங்கா கடற்படையினரின் ரோந்து நடவடிக்கை நடைபெற்றதால் மீனவர்கள் தொழிலில் ஈடுபட இயலாமல் திரும்ப நேர்ந்ததாகவும் அறியப்படுகிறது.

இதேவேளை நேற்று அதிகாலை தொடக்கம் கரையோரப் பகுதிகளையும் யாழ். கோட்டைப் பகுதிகளையும் சிறிலங்காவின் பொம்மர் விமானம் பல தடவை நோட்டமிட்டுச் சென்றுள்ளது. மக்கள் தெருக்களில் குழுமி நின்று வானத்தை அண்ணார்ந்து பார்த்தவண்ணம் நின்றார்கள். (21), (90), (17)

## வல்வைக் கடற்பரப்பில் மீனவர் மீது தாக்கு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பலத்த தாக்குதலினால் அப்பகுதி சில மணி நேரம் அதிர்ந்தது.

நேற்று அதிகாலை 2.45 மணியளவில் கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினர் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களைக் கண்டதும் தாக்குதலை தொடுத்தனர்.

இத் தாக்குதலுக்கு அஞ்சிய மீனவர்கள் சிலர் தமது மீன்பிடி வள்ளங்கள், வலைகள், என்ஜின்களை விட்டுவிட்டு நீந்திக் கரையை வந்தடைந்தனர். கடற்படையினரின் நடவடிக்கைகள் ஓய்ந்ததும் பின்னர் சென்று தமது உடமைகளை மீட்டனர். (யோ)

# நக்சலைட் ஸ்தாபகர் சீத்தாராமையா கைது

(டில்லி)

இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் நக்சலைட் என்ற இயக்கத்தின் ஸ்தாபகரான கொர்தப்பள்ளி சீத்தாராமையா (வயது 74) அவர்களைநேற்று பொலீசார் கைது செய்துள்ளனர்.

இவர் கடந்த 9 ஆண்டுகளாகத் தலைமறைவாக இருந்தவர். இவர் கைது செய்யப்பட்டிருப்பது முக்கிய திருப்புமுனை என்று பொலீசார் கருதுகின்றனர். இவர் மக்கள் போராட்டக்குழு இயக்கத்தை 1980ஆம் ஆண்டு ஆரம்பித்தார். நக்சலைட் இயக்கத்தின் தீவிரவாத இயக்கமாக இது செயற்பட்டது. வறியவர்களுக்கு சமூக நீதி கேட்டும் நிலச்சீர் திருத்தங்களுக்காகவும் இது போராடி வருகிறது. இக் கைதினால் மக்கள் போராட்டக்குழுஇயக்கத்தின்மனவுறுதி தளர்ந்துவிடும் என்று பொலீசார் கருதுகின்றனர். ஆனால் இவரது தோழர்கள் பழிவாங்கக் கூடும் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

கடந்த மேமாதம் இந்த இயக்கத்தை அரசு தடைசெய்தது குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்ட சீத்தாராமையா விசாரணைக்காக ஹைதராபாத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இவர் இவ்வாறு கைது செய்யப்பட்டிருப்பது இது மூன்றாவது முறையாகும்.

நக்சலைட் இயக்கத்துக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளும், இளைய தலைமுறை நக்சலைட்டுக்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளுமே இவரது கைதுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

இவரது இயக்கம் ஆந்திராவில் 6 மாவட்டங்களில் அதிக செல்வாக்குடன் செயற்பட்டு வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சென்றல் - சென் ஜோன்ஸ் பரபரப்பான ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

சென்றல் - சென் ஜோன்ஸ் 89 ஆவது மாபெரும் கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் பெரும் திரளான மக்கள் மத்தியில் இடம்பெற்றது.

இப்போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்களான எஸ் சஞ்ஜீவ் 56 ஓட்டங்களை ஆட்டமிழக்காமலும் ஜி சிறிதரன் 55 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் ஜோடியாக இணைந்து 8ஆவது விக்கெட்டுக்கு 111 ஓட்டங்களைப் பெற்று ஒரு சாதனையை நிலைநாட்டியமை குறிப்பிடத்தக்கது.

சென் ஜோன்ஸ் கல்லூரி தனது முதலாவது இன்னிங்ஸில் மொத்தம் 106 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. யாழ். மத்தியகல்லூரி சார்பில் பந்து வீசிய ஆர். லக்ஸ்மிகான் 30 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். பிரமேசன், எஸ். மணிவதனன், எஸ். சதீஸ்குமார் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

சென்ஜோன்ஸ்கல்லூரி மீளவும் தொடர்ந்து விளையாட பணிக்கப்பட்டபொழுது இக் கல்லூரி ஒரு கட்டத்தில் 7 விக்கெட் நஷ்டத்திற்கு 82 ஓட்டங்களைப் பெற்று மிகவும் நெருக்கடியான நிலையில் ஜி. சிறிதரனும், எஸ் சஞ்சீவும் மிகவும் நிதானமாகவும் சிறப்பாகவும் விளையாடி கிரிக்கெட் ரசிகர்களின் மனதைக் கவர்ந்து தமது கல்லூரிக்கு புகழ்மாலைதேடிகொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி முடிவுற்ற பொழுது சென் ஜோன்ஸ் கல்லூரி 8 விக்கெட் நஷ்டத்திற்கு 198 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆர். லக்ஸ்மிகான் யாழ். மத்திய கல்லூரி சார்பில் சிறப்பாக பந்துவீசி 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 46 ஓட்டங்களைக் கொடுத்தார்.

இப்போட்டிக்கு திரு. வித்தியாதரனும் திரு சுசேந்திரலிங்கமும் சிறப்பாக மத்தியஸ்தம் வகித்தனர்

இப்போட்டியில் சிறந்த துடுப்பாட்டக்காரர் கே. சுரேஸ்[யாழ் மத்தியகல்லூரி), சிறந்த வீரர் கே. சுரேஸ் [யாழ். மத்திய கல்லூரி] சிறந்த பந்து வீச்சாளர் ஆர். லக்ஸ்மிகான் [யாழ். மத்திய கல்லூரி] சிறந்த சகல துறைவீரர் ஜி. சஞ்சீவ்]சென் ஜோன்ஸ் கல்லூரி] சிறந்த மைதான வீரர் எஸ்: பீஸ்மன் [சென் ஜோன்ஸ் கல்லூரி) [52]

நவாலி

னங்கள் மீது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல்களை நடாத்தினர். அதனைத் தொடர்ந்து அவ் விமானங்கள் தாக்குதலைக் கைவிட்டு திரும்பிச்சென்றன.

காலை இப்பகுதியை பல தடவை வட்டமிட்ட இரு குண்டு வீச்சு விமானங்கள் அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசின. இக்குண்டுகள் நவாலி தெற்கு மாரியம்மன் கோவில் பகுதியிலும் கொத்

யூகோ

கொள்ளப்பட்டன. இதனால் உங்களுக்குச் செய்யும் உதவியைப் பெருக்கிக் கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது


யுத்தத்தினால் இப்பகுதி மக்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகள் எமக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தருகிறது எங்களால் முடிந்த உதவியை வழங்க நாம் முயற்சிக்கிறோம். எங்களது உதவி முயற்சிகள் போதாது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் கஷ்டங்கள் குறித்து நாம் மிகவும் அக்கறை கொண்டுள்ளோம். இடம்பெயர்ந்த மக்களில் தொழில் முயற்சிகளை உருவாக்க உதவுவதே எமது நோக்கம் 1993 இல் எமது திட்டங்களை விஸ்தரிக்க உள்ளோம். கிளிநொச்சியிலும், வவுனியாவிலும் எமது சேவைகளை விரிவாக்கியுள்ளோம். இந்தவேலைகளை மேற்பார்வை செய்ய தாம் வருடத்தில் மூன்று முறை வந்து போகிறோம் என்றும்

## மாண அறிவித்தல்

பா. நேரம்: தினசரி ந.ப. 12 – பி.ப. 2 வரை
(ஞாயிறு மூடப்படும்) (4074)

# ஸ்ரீதர் திரையரங்கில்...
# "தமிழோசை"
## தினசரி மாலை
## 4 மணிக்கும் 6 மணிக்கும்
காண்பிக்கப்படுகிறது
(சி-6149)

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு:
25-06-1981

உதிர்வு:
21-03-1992

செல்வி கணேசன் சாறுபி
திதி: 09 - 04 - 1993

பன்னிரு மாதங்கள் சென்றாலும் உன்முகமும்
கருணையும் எம் எல்லோர் உள்ளங்களிலிருந்தும்
அகலவில்லையே "றூபி" என நித்தமும்
கண்முன் தோன்றுகிறாயே.

கைதடி மத்தி, பெற்றார்,
கைதடி. [4538] உறவினர்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

அடுத்தடுத்து நான்கு குண்டுகளை வீசின. இக்குண்டுகள் நவாலி தெற்கு மாரியம்மன் கோவில் பகுதியிலும் கொத்துக்கட்டி வயல்கரை பாதையோரங்களிலும் வீழ்ந்து வெடித்தன.

இக் குண்டுவீச்சு விமானங்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலைத் தொடர்ந்து அவ் விமானங்கள் திரும்பிச் சென்றுவிட்டன.

இத் தாக்குதலில் வயல் வெளியில் நின்ற மாடு ஒன்று காயமடைந்ததுடன் பனை மரங்களும் சேதமடைந்தன.

### மருத்துவ

வெகுசனத் தொடர்பு சாதனங்களான தினசரிப்பத்திரிகை, வானொலி போன்றவற்றின் மூலமும் சுவரொட்டிகள் மூலமும் நடாத்தப்படவுள்ளது.

இரண்டாவது கிழமை விடுதலைப் புலிகள் மாணவரமைப்பின் உதவியுடன் ஆசிரியர்களுக்கு முக்கியமாக பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு போசாக்கு உணவைப் பற்றியும், உள்ளூர் உற்பத்திகளையும் கொண்டு போசாக்கு நிறைந்த நிறை உணவுகளை தயாரிக்கும் முறைகளைப் பற்றியும் வகுப்புக்கள் எடுக்கப்படவுள்ளன இவ்வகுப்புகளை வட்டாரீதியாக மேற்கொள்ள முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கிழமை, நாலாவது கிழமை அரசியல்துறை மகளிர் பிரிவின் ஒத்துழைப்புடன் வட்டாரீதியாக தாய்மார்களை ஒன்று திரட்டி பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் உதவியுடன் போசாக்கு நிறை உணவை தயாரிக்கும் முறைகளை உரிய விளக்கத்துடனும் செயல்முறை வகுப்புக்களுடனும் நடாத்தப்படவுள்ளன

மேற்கூறிய போசாக்கு உணவுத்திட்டத்தை மக்கள் மத்தியில் சரியான முறையில் திறம்பட செயற்படுத்துவதற்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவிகள் பெறப்படவுள்ளன என மேலும் தெரிவிக்கப்படுகிறது.

எங்களது உதவி முயற்சிகள் போதாது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் நாம் உங்களுக்கு அதிகம்உதவியுள்ளோம் என்று போரூட் கொழும்புப் பிரதிநிதி போல் ஹென்றிக் கிளான்ட் சொன்னார்.

நேற்று மாலை அரச சார்பற்ற நிறுவனங்களில் நிகழ்ந்த செய்தியாளர் சந்திப்பில் போரூட் பிரதிநிதி போல் ஹென்றிக் கிலான்ட் இதனைத் தெரிவித்தார். றெட்பானா பிரதிநிதி றோர் ஏ ஹக் உடனிருந்தார்.

அபிவிருத்தித் திட்டங்கள், மனித நேய உதவிகள் மற்றும் புனர்வாழ்வுப் பணிகளில் சிறிலங்கா அரசுடன் சேர்ந்து செயற்படுகிறோம். போராடும் அமைப்பும் எமது சேவையை ஏற்றுள்ளது இது நல்ல அறிகுறியாகும் என்றும்

தரை வழிப் பாதை மூடப்பட்டதும் எமது மனித நேய சேவைக்குத் தடையாக உள்ளது இங்குள்ள நிலைமைகள் பற்றித் தகவல் அறிவதும் சிரமம், இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் குழந்தைகள் தேவை மற்றும் விதவைகளின்

### காங்கேசன்

யூடாக குடாநாட்டுக்கு வெளியே சென்று திரும்ப விரும்பும் அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வேண்டிய போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் உத்தியோகப்பற்றற்ற தகவல் ஒன்று தெரிவிக்கின்றது

மேலும் பெரும்பாலும் அடுத்தவாரமளவில் குடாநாட்டுக்கு உணவுப்பொருள்களை எடுத்துவரும் செயற்பாடு சாத்தியப்படும் என்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் குழுஒன்று அடுத்தவாரம் இதுதொடர்பாக பலாலிக்குச் செல்ல உள்ளதாகவும் வேறொரு தகவல் தெரிவிக்கிறது. (க)

மேற்பார்வை செய்ய தாம் வருடத்தில் மூன்று முறை வந்து போகிறோம் என்றும் போரூட்பிரதிநிதிபோல்ஹென்றிக் கிளான்ட் தெரிவித்தார்.

றெட்பானா பிரதிநிதி றோர் ஏ ஹெக் கருத்துத்தெரிவிக்கையில்;

உதவி அரச அதிபர் பிரிவுகளில் நாம் புனர்வாழ்வுப் பணிகளில்ஈடுபட்டுள்ளோம். எமது இலக்குகளுக்கு அமைவாக நாம் திட்டங்களை வகுத்துச் செயற்படுகிறோம். சுகாதாரம், போஷாக்கின்மைபோன்ற விடயங்களில் நாம் உதவி வருகிறோம். முகாம்களில் வாழும் பிள்ளைகளுக்கு அப்பியாசக் கொப்பிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டுள்ளோம். அவை மிக விரைவில் கப்பல் மார்க்கமாக அனுப்பி வைக்கப்படும் என்றார். யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் மக்களின் கஷ்டங்களை இனங்கண்டு தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் தாம் புனர்வாழ்வு வேலைகளில்ஈடுபடுகிறோம் என்றார்.

யாழ்ப்பாண மக்கள் படும் துன்பங்களைக் கண்டு நாம் அனுதாபப்படுகிறோம். எவ்வளவு உதவ முடியுமோ அவ்வளவு உதவ முயற்சிக்கிறோம். உதவியை இனாமாக வழங்காமல் தொழில் முயற்சி மூலம் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஆவன செய்யும் பொருட்டே நாம் உதவுகிறோம் என்று இருவரும் தெரிவித்தனர்.

### இளவயதில்

புற்று நோய்க்குள்ளாகிறார்கள் என்றும் பெண்களுக்கு வாதநோய் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் இவ்வாறு இருக்கும் பலர் தமது 45 வயதுக்குள் மாரடைப்பு நோய் காரணமாக இறக்கிறார்கள் என்றும் ஒல்லியாக உள்ளோர் தமது 70 வயதிலும் உற்சாகமாக வாழ்க்கை நடாத்துகிறார்கள் என்றும் அம்மையம் தெரிவித்துள்ளது. (17)

## மரண அறிவித்தல்

### செல்வி விஜயரூபா திருநாவுக்கரசு

(நுண்கலைப்பீட மாணவி யாழ். பல்கலைக்கழகம்,
முன்னாள் கதிரேசன் குமர மகாவித்தியாலய ஆசிரியை
நாவலப்பிட்டி)

காங்கேசன்துறை குமாரகோயிலடியை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது உடுவில் தெற்கு பாவோடையை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்வி விஜயரூபா அவர்கள் 19-03-93 அன்று காலமானார்.

இவர் திரு. திருமதி திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மகளும், செல்வன் குமாரரூபன் (லண்டன்), செல்வன் கணேசரூபன் (லண்டன்) செல்வி விமலரூபா (வலிகாமம் தெற்கு பிரதேசசபை) ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்ற திரு. செல்லப்பா செட்டியாரினதும் திருமதி நாகம்மா அவர்களின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 20 - 03 - 93 நேற்று தகனம் செய்யப்பட்டது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உடுவில் தெற்கு, தகவல்:
பாவோடை திரு. திருமதி திருநாவுக்கரசு
மானிப்பாய். [4539]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 20-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8724

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-1250, 26-6197, 26-0375, 41-5015, 27-5187,
26-8674, 24-8429, 24-7941, 27-9033, 26-0355,
24-7623, 26-6775, 24-4367, 26-5870, 42-3114,
24-7087, 26-0407, 24-0207, 26-3177, 41-6544.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-1325, 42-1178, 24-5092, 27-4024, 22-2250,
28-2212, 41-4129, 42-0733, 41 8449, 26-5206,
42-6452, 28-6623, 41-9876, 42-9345, 40-0774,
26-1741, 26-2737, 27-1292, 28-2145, 28-4255.